# நவயுக வாசகம்

630

முதற் படிவம்—பொது

OFFICE OF THE [illegible] OF BOOKS
17 NOV 1956
MADRAS

630
4-55

இராவ்சாகிப், கு. அருணாசலக் கவுண்டர்.
பேராசிரியர்
ம. தி. தா. இந்து காலேஜ், திருநெல்வேலி.



TB
031(6)
N55
88398

...பிரமணிய பிள்ளை, திருநெல்வேலி

# நவயுக வாசகம்

முதல் படிவம்—பொது

இராவ்சாகிப், கு. அருணாசலக் கவுண்டர்
ம. தி. தா. இந்து காலேஜ், திருநெல்வேலி.

எஸ். ஆர். சுப்பிரமணிய பிள்ளை
பப்ளிஷர்ஸ் : : திருநெல்வேலி

பதிப்புரிமை]

[விலை அணா 12

முதற் பதிப்பு—1953
இரண்டாம் பதிப்பு—1954
மூன்றும் பதிப்பு—ஜூலை, 1955

தமிழ்நாடு அரசாணக் காப்பக நூலகம்
சென்னை-600 008.
११३१८

பாடப் புத்தகக் கமிட்டி அங்கீகரித்தது
பக்கம் 118, கெஜட் 19-5-54.

எஸ். பி. எஸ். பிரஸ், சென்னை-1.

# பொருளடக்கம்

## செய்யுள்


| எண் | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | வாழ்த்து | ... | 1 |
| 2. | வருணனை | ... | 4 |
| 3. | தனிப்பாடல் | ... | 5 |
| 4. | கதைப்பகுதி | ... | 6 |
| 5. | அறநெறி : குறள் 40 | ... | 9 |


## உரை நடை


| | | | |
|---|---|---|---|
| 1. | ஆன்றோர் அடிச்சுவட்டிலே | | |
| | —எஸ். இராதாகிருஷ்ணனவர்கள் | ... | 15 |
| 2. | உணவு வகையில் | | |
| | —புறநாட்டுப் பொருள் | ... | 23 |
| 3. | கவிஞர்களைப் பற்றி | | |
| | —நம்பியாண்டார் நம்பி | ... | 31 |
| | —குமரகுருபரர் | ... | 36 |
| 4. | இலக்கிய வரலாற்றிலே | | |
| | —தேவாரங்களைத் தேடியது | ... | 44 |
| 5. | வெளி நாடுகளில் | | |
| | —பர்மாவிலே | ... | 49 |
| 6. | கவிதை பிறந்த கதை | | |
| | —சேக்கிழார் பெரியபுராணம் பாடியது | ... | 54 |
| 7. | பொது | | |
| | —மின்சாரம் | ... | 59 |
| | —நூல் நிலையம் | ... | 64 |
| 8. | வீரர்களைப் பற்றி | | |
| | —மைசூர் ஐதர் அலி | ... | 69 |
| 9. | நாடகம் | | |
| | —வைர அட்டிகை | ... | 74 |

# நவயுக வாசகம்

முதல் படிவம்—பொது

---

## 1. வாழ்த்து

### தாய் நாடு

எந்தையுந் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே—அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே—அவர்
சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து
சிறந்ததும் இந்நாடே—இதை
வந்தனை கூறி மனத்தில் இருத்தி என்
வாயுற வாழ்த்தேனோ ?

இன்னுயிர் தந்தெமை ஈன்று வளர்த்(து)அருள்
ஈந்ததும் இந்நாடே—எங்கள்
அன்னையர் தோன்றி மழலைகள் கூறி
அறிந்ததும் இந்நாடே—அவர்
கன்னிய ராகி நிலவினில் ஆடிக்
களித்ததும் இந்நாடே—தங்கள்
பொன்னுடல் இன்புற நீர்விளை யாடி, இல்
போந்ததும் இந்நாடே—இதை
வந்தே மாதரம், வந்தே மாதரம்
என்று வணங்கேனோ ?

—பாரதியார்

# காலை வணக்கம்

வாரும் ; வாரும், தெய்வ வடிவேல் முருகரே !
வள்ளி மணாளரே ! வாரும் ;
புள்ளி மயிலோரே ! வாரும்.

சங்கம் ஒலித்தது ; தாழ்கடல் விம்மிற்று ;
சண்முக நாதரே ! வாரும் ;
உண்மை விநோதரே ! வாரும்.

பொழுது விடிந்தது ; பொற்கோழி கூவிற்று ;
பொன்னனை வேலரே ! வாரும் ;
மின்னார்முந் நூலரே ! வாரும்.

காகம் கரைந்தது ; காலையும் ஆயிற்று ;
கண்ணுதல் சேயரே ! வாரும் ;
ஒண்ணுதல் நேயரே ! வாரும்.

செங்கதிர் தோன்றிற்று ; தேவர்கள் சூழ்ந்தனர் ;
செங்கல்வ ராயரே ! வாரும் ;
எங்குரு நாதரே ! வாரும்.

வீணை முரன்றது ; வேதியர் சூழ்ந்தனர் ;
வேலா யுதத் தோரே ! வாரும் ;
காலா யுதத் தோரே ! வாரும்.

—இராமலிங்க சுவாமிகள்

3

## உற்ருர் ஆர் உளரோ ?

தலையே ! நீ வணங்காய்—தலை
மாலை தலைக் கணிந்து,
தலை யாலே பலிதேரும்
தலைவனைத்
தலையே! நீ வணங்காய்.

கண்காள் ! காண்மின்களோ—கடல்
நஞ்சுண்ட கண்டன் தன்னை
எண்தோள் வீசிநின் ருடும்
பிரான் தன்னைக்
கண்காள் ! காண்மின்களோ.

செவிகாள் ! கேண்மின்களோ—சிவன்
எம்மிறை செம்பவளம்
எரிபோல் மேனிப் பிரான் திறம்
எப்போதும்
செவிகாள் ! கேண்மின்களோ.

நெஞ்சே ! நீ நினையாய்—நிமிர்
புன்சடை நின் மலனை
மஞ்சாடும் மலை மங்கை
மணுளனை
நெஞ்சே ! நீ நினையாய்.

உற்ருர் ஆர் உளரோ ?—உயிர்
கொண்டு போம் பொழுது
குற்ருலத் துறை கூத்தன் அல்லால்
நமக்கு,
உற்ருர் ஆர் உளரோ !

—நாவுக்கரசர்

# 2. வருணனை

## சந்திரன்

மீனினம் ஓடிப் பரக்குதம்மா—ஊடே
வெள்ளி ஓடம் ஒன்று செல்லுதம்மா
வானும் கடலாக மாறுதம்மா—இந்த
மாட்சியில் உள்ளம் முழுகுதம்மா.

கூனக் கிழவி நிலவினிலே—ராட்டில்
கொட்டை நூற்கும் பணி செய்வதைஇம்
மாநிலங் கண்டு மகிழ்ந்திடவே—காந்தி
மாமதி ஓங்கி வளருதம்மா.

சின்னஞ் சிறுவில்லாய்க் கண்டதம்மா—பின்னர்
செம்பொற் குடம் போலே தோன்றுதம்மா
என்ன அதிசயம் பாராய் அம்மா—ஈதோர்
இந்திர சாலமோ கூறாய் அம்மா.

வளர்ந்து வளர்ந்து பெருகுதம்மா—உடல்
வட்டந் திருந்தி வருகுதம்மா
தளர்ந்து தளர்ந்துபின் போகுதம்மா—கண்ணில்
சற்றுந் தெரியாமல் ஆகுதம்மா.

பாலாழி மீது படர்ந்த வெண்ணெய்—ஒரு
பந்தாய் உருண்டு திரண்டதுவோ ?
மேலாய் உலகில் ஒளி செயவே—ஈசன்
விண்ணகம் இட்ட விளக்கிதுவோ ?

பொன்மரம் காய்த்த கனிஇதுவோ—இந்தப்
பூமகள் ஆடுங் கழங்கிதுவோ ?
கன்மன முங்கனி கொள்ளக்—கவினொளி
காட்டி விளங்கும் மதி இதுவோ ?

—தேசிக விநாயகம் பிள்ளை

# 3. தனிப்பாடல்

## சோம்பேறிப் பையன்

ஊரும் எறும்பே! ஒருமணி நேரம்
ஒளித்து விளையாட வாராயோ?
நேரமில்லை; மழைக்காலம் நெருங்குமுன்
நெல்மணி சேர்த்திடவேண்டும் அப்பா

மாமலர்தோறும் திரியும் வண்டே!—பாண்டி
வட்டாட என்கூட வாராயோ?
ஆமிந்த வேளை அலர்மலர் மூடுமுன்
அள்ளித்தேன் சேர்த்திட வேண்டும் அப்பா.

காகமே! கால்மணிநேரம் என்னோடு
களித்து விளையாட வாராயோ?
ஆகா? நேரம்எனக் கில்லை அப்பா—மழைக்
காகும் கூடுகட்ட வேண்டும் அப்பா.

ஓடுசிற்ருறே! ஒரு நிமிஷம் விளை
யாட உவந்துநீ வாராயோ?
நாடு செழிக்கநன் னீர்விட வேண்டும்; என்
நண்பனே போதெனக் கில்லை அப்பா.

வானத் துலாவிடும் சூரியனே! கீழே
வந்துவிளை யாடவா ராயோ?
போனகம் கொள்ளவும் நேரமில்லை; புத்தி
கெட்ட பையா வர மாட்டேன் அப்பா.

ஓகோ இதுஎன்ன ஒருவரும் என்கூட
ஓடிவிளையாட வாராரோ?
ஆகாத பிள்ளையோ நான்மட்டும் அந்தப்பேர்
அண்டாமல் பார்த்திட வேண்டும் இனி.

—எஸ். முத்துசாமிப் பிள்ளை

# 4. கதைப்பகுதி

## புல்

[புல் தனது சரிதத்தைத் தானே கூறுகின்றது.]

பசும்புல் என்பெயர். பட்ட பாடெல்லாம்
ஒருபெருங் கதையாம், உரைப்பதும் எளிதோ?
விரிவிடம் படுமொரு வீட்டின் முன்றிலில்
வளர்ந்தேன், அங்குள்ள மனிதரோ கொடியர்.
தத்தம் மக்களும் தாமுமே என்றும்
பெற்றுப் பெருகிப் பெருங்குடி யாகி
வாழக் கருதுவர், வகுத்திடலென்? அவர்
வாயிற் பாடியில் வாடி வணங்கி
வயிற்றிற் கின்றிநா வறண்டு 'தண்ணீர்
தண்ணீர்' என்று தவித்துத் தவித்து
வாணு ளெல்லாம் வருந்தி நொந்தேன்.
குடிக்க நீரும் கொடுத்திலர் பாவிகள்.
விண்ணி லிருப்பினும் மண்ணில் யான்படும்
வருத்தமும் வாட்டமும் கண்டவ் வானம்
அளித்த தமுதம்; ஆர வுண்டனன்.
விசும்பில் துளிகள் வீழி னல்லால்
பசும்புல் தலை, இப் பாரிற் காணுமோ?
மனிதரும் போற்றி வாழ்வமோ யாமும்?

கேளீர் கதையினும்: கிடைத்த நீரை
அருந்திப் பலநாள் அயர்வும் நீங்கித்
தெளிந்து நிமிர்ந்தேன். சிறிதென் உடலில்
பச்சையும் பிடித்தது. பார்த்தனர் பாவிகள்.
தரிக்கிலர் உள்ளம். தழைக்கும் தலையைக்
காலால் மிதித்தனர்; கழுத்தையும் அறுத்தனர்.

ஆட்டையும் மாட்டையும் அடித்து மேய்த்தனர்.
படர்ந்த இடமெல்லாம் பாழே யாக்கினர்.
இருந்த இடமும் இல்லா தியற்றினர்.
உயிரும் உடலும் குறுகி, ஒருசிறு
வேராய்த் தரையுள் வெகுநா ளாக
ஒளித்திருந் தேன். அவ் வுறைவிடந் தேடி,
வான்மழைத் தோழன் வந்தெனைக் கண்டு,
'மனிதன் செயலால் வலிஇழந் தனையோ?
என்துணை இருக்க இடருனக் குண்டோ?
அறிவிலி போலும் நீ! அஞ்சேல் அஞ்சேல்.
யாவையும் காப்பவன் ஈசன்' என்றெலாம்
தேற்றிய மொழியெனக் கூற்றமும் உறுதியும்
பெரிதும் அளித்தது. பெயர்த்தும் மெலமெலத்
தலையெடுத் தேன்; அதைத் தறுகணர் கண்டு
பிடித்தனர் வெட்டினர் பிடுங்கி எறிந்தனர்;
சாணியைக் கரைத்துத் தலையில் கொட்டினர்;
துடைப்பங் கொண்டு துரத்தி யடித்தனர்.
யாவும் சகித்தங் கிருந்தனன். என்செய்வேன்?
தளர்ச்சி யுற்றிலேன். தகும்நற் காலம்
வருமெனச் சற்று மறைந்து தங்கினேன்.
ஐவரை விடயான் அதிபல சாலியோ?

மறைந்து சின்னாள் வாழுங் காலை,
ஒருதினம் வீட்டில் உள்ளார் அனைவரும்
உறவினர் இருக்கும் ஓரூர் சென்றனர்.
வெகுநா ளாகியும் மீண்டிலர். யானும்,
இதுவே தருணம் என்று நினைத்து,
விரைவின் வளர்ந்து, விரும்பிய படியெலாம்
தழைத்துச் செழித்துச், சார்விட மெங்கும்
படர்ந்து பற்றிப் பல்கிளை யாகி,

வாய்த்தஇவ் வித்தாம் மக்களைப் பெற்று
வாழ்ந்திருக்கின்றேன். மற்றவர் வாழும்
வீட்டையும் இடித்து விடும்வலி இந்நாள்
எனக்குண் டாயினும், இழிவென விடுத்தேன்
இணங்கி யிருப்பவர் பிணங்கிப் பிரியவும்
பிணங்கிப் பிரிந்தவர் இணங்கிக் கூடவும்
செய்வினை என்போல் செய்ய வல்ல
மந்திர வாதிஇவ் வையகத் துண்டோ ?
செய்பிழை யாவும் தெரிந்து பொறுத்தேன்.
பொறுத்தவர் என்றும் பூமி யாள்வார் ;
எனக்குச் சொந்தம் இல்லா இடமெதாம்?
புல்லே யாயினும் புல்லிய குணமிலை.
அற்பர் இகழினும் அறிவால் பொறுப்பேன்.
தலையில் மிதிப்பினும் தயவால் சகிப்பேன்.
முயற்சி கைவிடேன். முயற்சி கைவிடாத்
திறமுடை யோரைத் திருமகள்
பெரிதும் உவந்து பேணமுன் நிற்குமே.

—சி. தேசிக விநாயகம் பிள்ளை

# 5. அறநெறி

## குறள்-40

### 1. கடவுள் வாழ்த்து

அகர முதல எழுத்தெல்லாம், ஆதி
பகவன் முதற்றே உலகு.
கற்றதனால் ஆய பயன்என்கொல், வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்?

### 2. நீத்தார் பெருமை

முற்றத்துறந்த முனிவரது பெருமை

செயற்கரிய செய்வார் பெரியர்; சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.
அந்தணர்என்போர் அறவோர், மற்(று)எவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்.

### 3. அறன் வலியுறுத்தல்

பொருள் இன்பங்களினும் அறமே வலியுடைத்து

ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாம் செயல்.
மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்;
ஆகுல நீர பிற.

### 4. இல்வாழ்க்கை

மனைவி மக்களுடன் கூடிவாழ்தல்

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.
வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன், வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

5. வாழ்க்கைத் துணை நலம்

வாழ்க்கைத் துணையாகிய இல்லாளது நன்மை

பெண்ணிற் பெருந்தக்க யாஉள, கற்பென்னும்
திண்மை உண் டாகப் பெறின்.
சிறைகாக்கும் காப்பெவன் செய்யும்? மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை.

6. மக்கட் பேறு

நன்மக்களைப் பெறுதல்

தந்தை மகற்காற்றும் நன்றி, அவையத்து
முந்தி இருப்பச் செயல்.
மகன் தந்தைக் காற்றும் உதவி, இவன் தந்தை
என் நோற்றான் கொல்எனும் சொல்.

7. அன்புடைமை

தொடர்புடையாரிடத்துக் காதலுடையன் ஆதல்

அன்பிலார் எல்லாம் தமக்குரியர்; அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு.
அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை, வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று.

8. இனியவை கூறல்

இனிய சொற்களை இயம்பல்

பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்(கு)
அணி; அல்ல மற்றுப் பிற.
இனிய உளவாக இன்னாத கூறல்,
கனி இருப்பக் காய்கவர்ந் தற்று.

9. செய்ந்நன்றி அறிதல்

பிறர் செய்த நன்மையை மறவாமை

நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்லது
அன்றே மறப்பது நன்று.

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

## 10. அடக்கம் உடைமை

தீநெறியிலே செல்லாது அடங்குதல்

யாகாவா ராயினும் நாகாக்க; காவாக்கால்
சோகாப்பர் சொல்இழுக்குப் பட்டு.
தீயினாற் சுட்டபுண் உள்ஆறும்; ஆறாதே
நாவினாற் சுட்ட வடு.

## 11. ஒழுக்கம் உடைமை

தத்தம் நிலைக்கு ஓதப்பட்ட ஒழுக்கத்தினை
உடையனாதல்

ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.
உலகத்தோ(டு) ஒட்ட ஒழுகல், பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்.

## 12. பொறையுடைமை

பிறர் செய்த தீமையைப் பொறுத்தல்

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத், தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை.
மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
தகுதியான் வென்று விடல்.

## 13. அழுக்காறாமை

ஒழுக்காறுக் கொள்க, ஒருவன்தன் நெஞ்சத்து
அழுக்காறு இலாத இயல்பு.

## 14. புறங் கூறாமை

புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின், சாதல்
அறங்கூறும் ஆக்கம் தரும்.

15. பயனில சொல்லாமை

பயனில் சொல் பாராட்டுவானை, மகன் எனல்,
மக்கட் பதடி எனல்.

16. தீவினை யச்சம்

தீயவை தீய பயத்தலால், தீயவை
தீயினும் அஞ்சப் படும்.

17. ஒப்புரவறிதல்

உலக நடையை அறிந்து செய்தல்

ஒப்புர வினல் வரும் கேடெனில், அஃதொருவன்
விற்றுக் கோள் தக்க துடைத்து.

18. ஈகை— வறியவர்க்கு வழங்கல்

ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல், தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்.

19. புகழ்— கீர்த்தி

தோன்றின் புகழொடு தோன்றுக ; அஃதிலார்
தோன்றலின் தோன்ருமை நன்று.

20. அருளுடைமை

அருள் இல்லார்க்(கு) அவ்வுலகம் இல்லை ; பொருள்
இல்லார்க்(கு)
இவ்வுலகம் இல்லாகி யாங்கு.

21. தவம்

உற்றநோய் நோன்றல் உயிர்க்(கு) உறுகண் செய்
அற்றே தவத்திற்(கு) உரு. [யாமை

22. வாய்மை— மெய்ம்மை

வாய்மை எனப்படுவது யாதெனின், யாதொன்றும்
தீமை இல்லாத சொலல்.
எல்லா விளக்கும் விளக்கல்ல ; சான்ருேர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.

23. வெகுளாமை—

கோபம் கொள்ளாமை

இணர்எரி தோய்வன்ன இன்ன செயினும்
புணரின் வெகுளாமை நன்று.

24. இன்ன செய்யாமை —

தீங்கு செய்யாமை

பிறர்க்கின்ன முற்பகல் செய்யின், தமக்கின்ன
பிற்பகல் தாமே வரும்.

25. நிலையாமை

கூத்தாட்(டு) அவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று.

26. துறவு— பற்றினை ஒழித்தல்

யாதனின் யாதனின் நீங்கியான், நோதல்
அதனின் அதனின் இலன்.

27. மெய்யுணர்தல்—

தத்துவ ஞானம்

எப்பொருள் எத்தன்மைத் தாயினும், அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.



# எஸ். இராதாகிருஷ்ணனவர்கள்

## இளமையிலே

தமிழ் நாட்டின் எல்லையில் குமரகோட்டமாகத் திகழும் திருத்தணியிலே, எஸ். இராதாகிருஷ்ண னவர்கள் பிறந்தார்கள். சமீபத்திலேதான் அவர் களுக்கு வயது அறுபது நிரம்பியது. அவர்கள் பிறந்தது வைதிக குடும்பத்திலே ; அந்தக் குடும்பத் தினர் செல்வமோ செல்வாக்கோ எதுவும் இல்லா தவர். பிறப்பாலோ செல்வத்தாலோ பெறலாகும் சிறப்பு இராதாகிருஷ்ணனவர்களுக்கு இல்லை ; என்றாலும், விடாமுயற்சியாலும், தளரா ஊக்கம், தன் நம்பிக்கை களாலும், இன்று அவர்கள் வாழ்க்கை யிலே மேம்பட்டு விளங்குகின்றார்கள்.

இளமையிலே அவர்கள் திருத்தணியிலும் திருப் பதியிலும் கல்வி பயின்றார்கள். அவை புண்ணியத் தலங்கள் அல்லவா? அத்தலங்களின் திருவிழாக்களும், அவற்றுக்கு வருகிற யாத்திரிகர் குழாங்களும், இளைய இராதா அவர்கள்உள்ளத்திலே சமய உணர்ச்சியைக் கிளறின. அதனால், பெரிய தத்துவஞானி என்று. பிற்காலத்திலே பெருமையடைய அவர்களால் முடிந் தது.

இளமையிலே இராதா அவர்கள் தனிமையிலே மோகங்கொண்டு ஒதுங்கியிருப்பார்களாம். தனிமை யிலே சாரம் உண்டு. தனித்திருந்து, இளைய இராதா படிப்பாராம்; படித்ததைச் சிந்திப்பாராம்; கூட்டத் திலே பழகக் கூசுவாராம்; ஆனால் அவர் கோழை அல்லர்.

பதினைந்தாவது வயதிலே இராதா அவர்கள் மேல்-படிப்புக்காகச் சென்னை—கிறித்தவக் கல்லூரியிலே சேர்ந்தார்கள். அங்கே, எப். ஏ.; பி. ஏ.; எம்.ஏ.—பரீட்சைகளிலே முதல்வராகத் தேறினார்கள். கலாசாலை கல்லூரிப் பயிற்சிகள், பலவிதங்களிலே அவர்களை மேம்படுத்தின. புனிதத் தலங்களிலே வாழ்ந்த சூழ்நிலையாம், இளமையிலேயே அவர்கள் சமய மனப்பான்மை உடையவர்கள். மேலும், கல்லூரியிலே அவர்கள் தத்துவ நூல்களைப் பயின்றார்கள். ஆதலின், உலகிலேயே மேலான ஒரு தத்துவ ஞானியாக அவர்கள் தலையெடுத்தார்கள். மாணவராய் இருந்தபோதே அவர்கள் இந்து மதத்தை ஆராய்ந்தார்கள். அப்போது சுவாமி விவேகானந்தர் இந்துமத தததுவங்களை விளக்கிப் பிரசாரம் செய்து வந்தார். விவேகானந்தர் யார் தெரியுமா? சுவாமி இராமகிருஷ்ணருடைய பிரதம சீடர் விவேகானந்தர்; கல்கத்தா-பல்கலைக் கழகத்திலே படித்துத் தேறிய பட்டதாரி. லௌகிக வாழ்க்கையைத் துறந்து, துறவியாய், அவர், இந்தியாவெங்கும் சஞ்சரித்து, இங்கிலாந்து அமெரிக்க நாடுகளிலேயும் இந்து மதத்தை எடுத்தியம்பிப் புகழடைந்தார்.இவர் தந்த விளக்கங்களாலும் விளம்பரங்களாலும், இந்து மதமே ஏற்றம் உற்றது; தமது பிதிரார்ச்சிதத்தை நினைந்து இந்து இளைஞர்களும் இறுமாப்படைந்தனர். அத்தகைய இளைஞருள் இராதா அவர்களும் ஒருவர்.

### ஆசிரியப் பதவிகளில்

படிப்பை முடித்து. இராதாகிருஷ்ணனவர்கள் சென்னை மாகாணக் கல்லூரியிலே தத்துவபோதகாசிரியராக அமர்ந்தார்கள். தத்துவ பாடம் சுவை

யிலாதது, சங்கடமானது என்று கருதப்பட்டது. அதை வெகு இரசமாக இராதாகிருஷ்ணனவர்கள் கற்பித்தார்கள். தத்துவ நூல்களிலே ஆழ்ந்த அகன்ற அறிவு இவர்களுக்கு இருந்தது; மேலும், ஆங்கில மொழியிலே அதிசயமான பயிற்சியும் இவர்களுக்கு இருந்தது. அதனை இவர்கள் வெகு இலாகவமாகக் கையாளுவார்கள். குற்றாலத் தருவிபோல அதனை இவர்கள் பொழியும்போது, இவர்களைக் கேட்பவர் அருவியாடிய பயன்போல, உள்ளம் குளிர்வர். சொல்லடுக்கல்ல இவர்கள் பேச்சுக்கள்; அவை வெற்றலங்காரம் அல்ல; வீண் ஆரவாரம் அல்ல; சமய நூல்களிலே பொதிந்த அரிய பெரிய கருத்துக்கள், இவர்கள் மதியிலே ஊறி வெளிப்படும்போது, அவற்றைத் தாங்கமாட்டாது ஆங்கில மொழியே தட்டுக்கெட்டுத் தடுமாறும் என்பார்கள்.

இராதாகிருஷ்ணனவர்கள் ஒரு நல்லாசிரியர். ஆசிரியர் பலரும் மாணவர் மனத்தை அறிவை வளர்ப்பதிலே முனைவார்கள். ஆனால் தங்கள் அறிவை வளம்படுத்துவதிலே அவர்கள் மிகுதியும் முயல்வதில்லை. அவர்களைப் போன்றவர் அல்லர் இராதாகிருஷ்ணனவர்கள். முடிந்த அளவு படிப்பார்; படிப்பதைச் சிந்திப்பார்; சிந்தித்துத் தெளிந்ததைத் தெள்ளமுதாக வடிகட்டி, அதைப் பேச்சாலும் எழுத்தாலும் பிறருக்கு வழங்குவார். சமய வாழ்வு தத்துவ ஞானங்களைப் பற்றி, ஐரோப்பியப் பத்திரிகைகளிலே எழுதி வந்தார். அவர்கள் எழுதியது புகழை நாடி அன்று; பொருளைத் தேடி அன்று; இந்து மதத்தைப் பற்றி, தாம் அறிந்து பயனடைகிற உண்மைகளை, உலகும் தெரிந்து உய்யவேண்டும் என்ற பெருங் கருணையால் எழுதினர்; பேசினர்; பேசுகிறார்.

அதனல், அவர்கள் பேச்சிலும் எழுத்திலும் அலாதி யான கவர்ச்சி இருக்கிறது

'உண்மையான இந்து சரியான எண்ணங் களையே நினைப்பான். பெருமையான செயல்களையே புரிவான். இந்து மதமும் உலகத்தினின்றும் ஒதுங்கித் தனித்து வாழப் போதிப்பதில்லை; சுயநலத்தை அது போக்கும். பொது நலங்கருதியே கருமங்களைப் புரிய அது தூண்டும்' என்பது இராதாகிருஷ்ண னவர்கள் முடிவு.

இராதாகிருஷ்ணனவர்கள் புகழ் பரவவே, அவர் கள், மைசூர்-பல்கலைக் கழகத்திலே தத்துவப் பேராசிரியராக நியமனம் பெற்ருர்கள். மூன்று வருடம் அங்கே போதித்தார்கள். அப்போது, தற் காலத் தத்துவ அறிஞர்களது முடிவுகளைத் தொகுத்து, ஆராய்ந்து அரிய நூல் ஒன்றை வெளியிட்டார்கள், உலகம் முழுவதும் அதைக் கொண்டாடியது. அமெ ரிக்காவிலே பேராசிரியர் ஒருவர் அதை வியந்து, தமது தலைமையுரை ஒன்றிலே, பேச்சு முழுவதும் அதையே புகழ்ந்து முடித்தாராம்.

கல்கத்தா-பல்கலைக் கழகத்திலே அதன் ஆசிரியர் ஒருவராகவும், பின் தலைவராகவும் அமர்ந்து, இவர்கள் அருஞ்சேவை புரிந்தார்கள். அவ்வமயம் இந்திய தத்துவ ஞானத்தைப் பற்றி இவர்கள் இங்கி லாந்திலே வெளியிட்ட புத்தகம் ஒன்று, 'இந்திய தத்துவம் புதிரானது, உதவாதது' என்ற ஐரோப் பியர் கருத்தை மாற்றியதாம்.

### மேனுடுகளில்

1926-லே சாம்ராச்சிய சருவ கலாசாலைகளின் மகாநாடு கேம்பிரிட்ஜ் நகரிலே நடந்தது. கல்கத்தா-

பல்கலைக் கழகப் பிரதிநிதியாக, அதற்கு இராதா கிருஷ்ணனவர்கள் சென்றார்கள். வெளிநாடுகளினின் றும் முன்னம் எத்தனையோ அழைப்புக்கள் வந்திருந் தாலும், இவர்கள் அவற்றை ஏற்றுக்கொள்ளவில்லை. தற்போது, தாய் நாட்டின் விருப்பத்தை அவர்களால் தட்டிக் கழிக்க முடியவில்லை. இங்கிலாந்திலே பல் வேறு இடங்களில் அவர்கள் சொற்பொழிவாற்ற அழைக்கப்பட்டார்கள்; என்றாலும், ஆக்ஸ்போர்டு மாநகரிலே மட்டும் இவர்கள் பேசுவதற்கு ஒப்புக் கொண்டார்கள். இவர்கள் பேச்சுக்களைக் கேட்ட ஆங்கிலேயர்கள் வியப்பும் உவப்பும் ஒருங்கே மேவி, இவர்களைக் கொண்டாடினார்கள். ஆங்கில மொழி யிலே இவர்கள் பெற்றுள்ள அதிசயத் தேர்ச்சியைப் போற்றினார்கள்.

இங்கிலாந்து யாத்திரையை முடித்து இராதா கிருஷ்ணனவர்கள் அமெரிக்காவுக்குச் சென்றார்கள். சிக்காகோ சருவ கலாசாலையிலே பேசினார்கள். பேச்சுக்களின் நடுவே கேலி பரிகாசங்களால் கூட்டத் தைச் சிரிக்கவைப்பது இவர்கள் வழக்கம். அடுத்த கணம் சீரிய மொழிகளால் கூட்டத்தைச் சிந்திக்க வைப்பார்கள். சென்ற இடமெல்லாம் இவர்கள் சிறப் படைந்தார்கள்.

அப்போது, ‘கல்கி’, அல்லது ‘எதிர்கால நாக ரிகம்’ என்று இவர்கள் எழுதிய புத்தகத்திலே, மானி டருக்கு விஞ்ஞானம் செய்த சேவைகளை விளக்கி, ‘விஞ்ஞானத்தால் உடலுக்கு இலாபம் உண்டு; ஆனால் உள்ளமும், ஆன்மாவும் விரும்பியதை அடைவதில்லை. மனிதன் தற்போது தன் மூதாதையரைவிட, சுக போகத்திலே வாழ்கின்றான்; என்றாலும், அவன் மனம் இருக்க வேண்டும் அமைதியில் இல்லை’ என்கிறார்.

யாத்திரையை முடித்து இந்தியா வந்தபொழுது, இவர்களுக்கு ஆந்திர-பல்கலைக் கழகம் 'டி லிட்' என்ற பட்டம் தந்து இவர்களைப் பாராட்டியது. இது போன்ற பாராட்டுக்கள் பலவற்றை இவர்கள் பெற்றிருக்கின்றார்கள்.

ஆக்ஸ்போர்ட்டு பல்கலைக் கழகத்திலே ஆசிரியப் பதவி ஏற்று, இவர்கள் மீண்டும் இங்கிலாந்துசென்றார்கள். இவ்வமயமும், மான்சஸ்டர், லண்டன் மாநகரங்களிலே இவர்கள் ஆற்றிய சொற்பொழிவுகளைப் பலரும் பாராட்டினார்கள். லண்டன் பல்கலைக் கழகத் தலைவர், ஒரு பிரசங்க முடிவிலே, இவர்களுக்கு நன்றி கூறியபொழுது, 'தற்போது மக்களிடை ஐயமும், அச்சமும் நிலவுகின்றன என்பது மெய்யே; அவற்றை எப்படி அகற்றலாமென்பதற்குத் தாங்கள் வழி காட்டினீர்கள்; எங்களுக்கு எதிர்காலம் பற்றிய நம்பிக்கையும், தைரியமும் புகட்டினீர்கள். ஆங்கில மொழியிலே தாங்கள் அடைந்துள்ள புலமையை நினைக்கவே வியப்பாக இருக்கின்றது. இது தங்கள் தாய்மொழி அன்றே' என்றார்.

### பல்கலை—தலைமை

இராதாகிருஷ்ணனவர்கள் 1931-36-ல் ஆந்திர-பல்கலைக் கழகத்தின் தலைவராய் வீற்றிருந்தார்கள். மீண்டும் இவர்கள் ஆக்ஸ்போர்ட்டுக்குப் பேராசிரியராய்ச் சென்று, மூன்று வருடம் அங்கே தங்கியிருந்தார்கள். காசி சருவ கலாசாலையின் தலைவராகவும் இவர்கள் ஆனார்கள். நூற்றுக் கணக்கிலே சொற்பொழிவுகளை ஆற்றினார்கள். பட்டமளிப்புப் பிரசங்கங்களைச் செய்தார்கள். இந்தியர் தூதராய் மாஸ்கோ

விலே இருந்தார்கள். தற்போது ஐக்கிய பாரதத்தின் துணைச் சனாதிபதியாய்ப் பதவி வகிக்கின்றார்கள்.

### குணநலம்

இராதாகிருஷ்ணனவர்கள் இந்தியாவிலே முதன்மையான ஒருவர்; முக்கியமான ஒருவர். உதவியை நாடி, அறிவுரையை நாடித் தம்மிடம் வரும் பலவகையான மக்களிடமும், இவர்கள் அன்புடனும், அடக்கத்துடனும் நடந்து கொள்கின்றார்கள். எல்லாரிடமும் பரிவு காட்டுகிறார்கள், இவர்கள் 'சீறிவிழு' பவர் அல்லர். 'சிடுமூஞ்சி' அல்லர். கேலி, பரிகாசங்கள் செய்வார். சிரிப்பார்; சிரிக்கச் செய்வார். தடபுடலாக நடந்து கொள்கின்ற பலரை நாம் பார்க்கின்றோம். மற்றவர் தம்மை மதிக்கவேண்டும் என்பதற்காக, அவர்கள் அவ்விதம் நடந்து கொள்கிறார்கள். இராதாகிருஷ்ணனவர்களோ யாரிடமும் இனிமையாகவே நடந்து கொள்கிறார்கள். இவர்கள் தம்மைப் பற்றிப் பறையடிப்பதில்லை. பிறர் புகழ்வதையும் விரும்புவதில்லை. உயரிய பதவியிலே இருப்பினும் எளிய நடை, எளிய உடை, எளிய வாழ்க்கை முறைகளையே இவர்கள் மேற்கொண்டிருக்கிறார்கள்.

சாதாரண நிலையிலிருந்து, இராதாகிருஷ்ணனவர்கள் வாழ்க்கையிலே படிப்படியாக உயர்ந்தார்கள். இன்று இந்தியாவின் சிந்தனையை அவர்கள் பிரதிபலிக்கின்றார்கள். காந்தியடிகள் இந்தியாவின் இதயத்தைப் பிரதிபலித்தார். தாகூர் இந்தியப் பண்பாட்டை எதிரொலித்தார்.

இராதாகிருஷ்ணனவர்கள் நீடு வாழ்க!

1. சொல்லும் தொடரும் :

| | | |
|---|---|---|
| குமர கோட்டம் | விழா, குழாம் | லௌகிக வாழ்க்கை |
| வைதிக குடும்பம் | தத்துவ ஞானி | விளம்பரம் |
| விடா முயற்சி | சமய மனப்பான்மை | சொல்லடுக்கு |
| தளரா ஊக்கம் | பிரதம சீடர் | வெற்றலங்காரம் |
| மேம்பட்டு விளங்கல் | பல்கலைக் கழகம் | தட்டுக் கெட்டு |
| புண்ணியத் தலம் | பட்டதாரி | சொற் பொழிவு |

2. சிந்தனைக்கு :

1. நீ பிறந்து வளர்ந்த ஊர் எது? அதன் சூழ்நிலை என்ன? அதனால் நீ பாதிக்கப் பட்டாயா?

2. திருத்தணி, திருப்பதி—இந்தத் தல விசேடங்களை நீ அறிவாயா?

3. ஸ்ரீ இராமகிருஷ்ண சங்கத்தாரை நீ பார்த்திருக்கின்றாயா?

4. எஸ். இராதாகிருஷ்ணனவர்களைப் போல நல்லாசிரியர் ஆக நீ விரும்புகிறாயா? பிரதம மந்திரியாக உனக்கு விருப்பமா?

3. பயிற்சி :

வாக்கியத்தைப் பற்றி—1

'இளைய இராதா ஒதுங்கியிருப்பார்; படிப்பார்; படித்ததைச் சிந்திப்பார்':—இந்த வாக்கியங்களைக் கவனியுங்கள்.

வாக்கியம் என்றால் என்ன? சொற்கள் ஒன்றோ பலவோ அமைந்து, முடிந்த கருத்தைப் புலப்படுத்துவது எதுவோ அது வாக்கியம். 'படிப்பார்'—இங்கு ஒரு சொல்லாய் நின்று, 'இராதா படிப்பார்' என்ற கருத்தைப் புலப்படுத்துகின்றது. கருத்தமைதிக்கு இரண்டு விஷயங்கள் தேவை. ஒன்று எழுவாய்; மற்றது பயனிலை. எழுவாயும் பயனிலையுமே வாக்கியத்தின் அடிப்படை அமிசம்.

இந்தப் பாடத்தின் முதல் பக்கத்திலே அமைந்த வாக்கியங்களின் எழுவாய் பயனிலைகளை எடுத்தெழுது.

# புறநாட்டுப் பொருள்

## 1. உண்பன : தக்காளி முதலிய

நாம் சமையல் செய்து சாப்பிடும் காய்கறிகள் நமது நாட்டிலே வளர்ந்தவைகளா? புற நாட்டிலே இருந்து வந்த பொருள்களா? இதை எப்போதாவது நீங்கள் எண்ணிப் பார்த்தீர்களா? முட்டைக்கோசை ஆங்கிலேயர் கொண்டுவந்து இங்கே பயிர் செய்தார்கள் என்பதை எல்லோரும் அறிவர். தம்மட்டம்



பழம்: இச் சொல் (டமாட்டோ என்ற) ஆங்கில மொழி திரிந்து வந்தது. அதுவும் மேல்புலத்திலிருந்து வந்ததே. அதைக் தக்காளி என்கிறோம். உருளைக் கிழங்கும் அப்படியே; மண்ணிலே புதைந்து வளர்வதால், அதைக் கிழங்கு என்கிறோம்; உருண்டையால் இருப்பதால், உருளை என்கிறோம். இது,

முதலிலே அமெரிக்காவில் உண்டானது; பின்பு ஐரோப்பாவுக்குக் கொண்டுபோகப் பெற்றுக் கழிந்த நூறு வருடங்களாகத்தான், நமது மலையிலே அது பயிர் செய்யப்படுகிறது.

கத்தரி, மிளகாய்

கத்தரிக்காயை நமது நாட்டுப்பொருள் என்று எண்ணுகிறீர்கள்! இல்லை; அதுவும் அமெரிக்காவில் இருந்து வந்ததுதான். நம்முடைய முள்ளிக்காய் வேறு, கத்தரிக்காய் வேறு; முன்னையது உடம்புக்கு நலம் செய்யும். கத்தரிக்காயைத் தெலுங்கிலே 'வங்க்காய்' என்பார்கள், 'வங்க்காய்' என்றால் வங்க தேசத்தினின்றும் வந்த காய் என்பது பொருள். அமெரிக்காவினின்றும் வங்காளம் வழியாக, இது தென்னாட்டுக்கு வந்தது போலும். சிராார்த்த தினத்திலே மிளகாய் கூடாது என்கிறார்களே, அது ஏன் தெரியுமா! நானூறு வருடங்களுக்கு முன் அமெரிக்கா—சிலி என்ற இடத்திலிருந்து அது இங்கே வந்து குடி ஏறியது. அதற்கு நமது மொழியிலே பேரே இல்லை. மிளகாய் என்பது, மிளகு காய் என்ற தொடர் மருவியதுதான். ருசியிலே மிளகு போன்றது. மேலும் அது நீண்டு காயாகவும் இருக்கிறது; ஆதலின் மிளகு காய்—மிளகாய் என்ற காரணப் பெயர் பிறந்தது. இரண்டும் எரிப்பாய் இருந்தாலும் மிளகு, குணத்திலே சிறந்தது, உடம்புக்கும் உகந்தது.

நமதுடல், நமது நாட்டின் நீர் நிலங்களின் நுண்ணிய பண்புகளுக்குத் தகுந்தவாறும், தட்பவெப்ப நிலைக்கு இயைந்தவாறும், வளர்வது; ஆதலின் இயற்கை நிலைக்கு உட்பட்டுப் பல்லாயிர வருடங்களாய் இதே நாட்டிலே பயிராகி வரும் உணவுப்

பொருள்களே நமதுடலுக்கு ஏற்றவை. மிளகாய், கத்தரிக்காய், உருளைக்கிழங்குகளை விட, நமது மிளகு, முள்ளிக்காய், வள்ளிக்கிழங்குகள் மேலானவை; உடலுக்கும் உகந்தவை.

**சர்க்கரை**

சர்க்கரையை மிகுதியும் பயன்படுத்துகிறோம்; அதன் கதையை அறிவீர்களா? சர்க்கரை என்ற வட சொல்லுக்கு மணல் என்பது பொருள். சர்க்கரை, மணல்போன்று தோன்றியதால், அப்பெயர் பெற்றது. தனித் தமிழிலே அதனை 'அயிர்' என்பார்கள். அயிர் என்பதற்கும் முதலில் மணல் என்ற பொருள் இருந்தது. பின்பு தான் அதற்குச் சர்க்கரை என்ற பொருள் உண்டாயிற்று. பல நூறு வருடங்களுக்கு முன் நம்முடைய நாட்டிலே சர்க்கரை கிடையாது. அது சீன தேசத்திலிருந்து நமது நாட்டுக்கு வந்தது. நமது முன்னோர் கருப்பஞ்சாறு, பனஞ்சாறுகளைக் காய்ச்சி வெல்லம் செய்தார்கள்; ஆனால் வெல்லத்தையே சர்க்கரை ஆக்கும் வித்தை அவர்களுக்குத் தெரியாது. வெல்லத்தைப் பிடித்துப் பிள்ளையாராக்கி, நமது வைதிகர்கள் பூசை செய்வார்கள்; ஆனால், சர்க்கரையையோ, கற்கண்டையோ பிள்ளையாராக வைத்துப் பூசை செய்யார். ஏன் தெரியுமா? அவை புற நாட்டுப் பொருள்கள். அவற்றை வழங்குவது ஆசாரம் அன்று. கல்லைப் போலக் கண்டமாய் இருப்பதுதான் கற்கண்டு.

**2. பருகுவன: காப்பி, தேயிலை**

காப்பியும் தேயிலையும் புறநாட்டுப் பொருள்களே. காப்பி என்பது அரபிச்சொல். அரபியரோடு தமிழ

ருக்கு வியாபார சம்பந்தம் தொன்று தொட்டது; சேரமான் பெருமாள் அரேபியாவுக்குக் குடி போன தாக ஒரு கதை உண்டு. மலையாளக் கரையிலே குடி யேறிய அரபியர்தான் மாப்பிள்ளைகள் என்ற சாதி யார். இவ்வளவு போக்கு வரவு இருந்தாலும், அரபிக்



காப்பிச் செடி—கிளை



தேயிலைச் செடி — கிளை

காப்பிக் கொட்டையை வறுத்துச் சாறு இறக்கி, அதைப் பருகும் வழக்கம் இந்நாட்டிலே முற்காலத்தில் ஏற்படவில்லை. அதை உட்கொள்வது உடலுக்குச் சரிப்படாது என்று நம் முன்னோர் கருதினர்கள்; அனுசாரம் என்று ஒதுக்கினர்கள். ஆனால், பிற் காலத்தில் பிரஞ்சியரிடமிருந்து நாம் காப்பி குடிக்கும் வழக்கத்தைக் கற்றுக் கொண்டோம். இம்மாதிரியே தேயிலை பருகுவதையும் நாம் ஆங்கிலேயரிடமிருந்து கற்றோம். 'தே'—'சா' என்பது சீனத்துப் பொருள். சீன தேயத்துக்கும் நமது நாட்டுக்கும் பல நூறு

வருடங்களாகவே நெருங்கிய தொடர்பு நிலவியது என்றாலும், நம் முன்னோர்கள் சீனரிடமிருந்து தேநீர் பருகும் விதத்தைக் கற்றுக் கொள்ளவே இல்லை. புற நாட்டுப் பொருள்களை அனாசாரம் என்று அவர்கள் புறக்கணித்ததற்குக் காரணம் உண்டு. மனிதனுடைய உடல் அவன் வாழும் மண்ணின் இயல்நிலைக்குத் தக்கவாறு அமைந்திருக்கும். எவன் எவ்வூரிலே வாழ்கிறானோ அவ்வூர்ப்பொருளே அவன் உடலுக்கு உகந்தது. உடலும் உணவுப் பொருள்களும் ஒரே இயற்கை நிலையில் உண்டாவன; ஆதலின் ஒன்றுக்கொன்று ஒற்றுமையுண்டு; எனவே நமது மூதாதையர் விதேசிப் பொருள்களை விலக்கினர்.

3. பிற: வெற்றிலை

தற்போது, காப்பி, தேனீர், உருளைக்கிழங்கு முதலியவை பையப் பைய வழக்கத்திலே வந்து விட்டன போலவே, முற்காலத்தும் சர்க்கரை, கற்கண்டு, வெற்றிலை முதலியன வழக்கத்துக்கு வந்தன. வெற்றிலை புறநாட்டுப் பொருளா? ஆம்; ஏனென்றால் இதற்குத் தமிழிலே பெயர் இல்லை. பிற இந்திய மொழிகளிலும் இல்லை. வெற்றிலை என்றால் வெறும் இலை—அதாவது, சமையல் செய்யாது வெறும் இலையாய்த் தின்னப்படுவது இது ஒன்றுதான். தெலுங்கிலே இதை 'ஆக்கு' என்பார்கள். 'ஆக்கு' என்றால் இலை என்பதே பொருள். 'தாம்பூலம்' என்கிறோமே; தாம்பூலம் என்றால் என்ன தெரியுமா? தாமலம் என்ற சொல் திரிந்து தாம்பூலம் ஆயிற்று. அதற்குப் பொருள் பசியஇலை என்பதே. பழங்காலத்திலே, மலேயாத் தீவுகளினின்றும் இது கொண்டு வரப்பட்டு இங்கே பயிரிடப்பட்டது.

புகையிலை

பெயர்களை வைத்தே புறநாடுகளினின்றும் வந்த பொருள்களை அறியலாம். தற்போது நம்மவரிலே பலர் பலவகையாய்ப் புகையிலையை வழங்குகின்றனர். அதற்குப் பிரமபத்திரம் என்ற வடமொழிப் பெயரையும் கற்பித்திருக்கிறார்கள். முந்நூறு வருடத்திற்கு முன்னே அமெரிக்காவிலே மட்டும் புகையிலை இருந்தது. ஸர் வால்—தெர்ராலி என்ற ஆங்கிலன் தங்கம் சம்பாதிக்க அமெரிக்காவுக்குச் சென்றவன், அங்கே புகை குடிக்கும் வழக்கத்தைக் கற்றுவந்தான். அவன் மூலம் ஐரோப்பா எங்கும் சுருட்டுப் புகை பரவியது. அதன் பின் ஐரோப்பியன் ஒருவன்



புகையிலை

புகை குடிக்கும் வழக்கத்தை ஜகாங்கீர் என்ற நமது முகலாய வேந்தனுக்குக் கற்பிக்கவே—மன்னன் எப்படி மன்னுயிர் அப்படி—அப்பழக்கம் இந்தியாவிலே வேகமாய்ப் பரவியது. பெருவாரியாகப் புகையிலை இன்று பயிரிடப்படுகிறது. அது ஒரு நச்சுப் பொய்கை. அதை விலக்குவது அவசியம்.

புகையிலைக்குப் ‘பிரமபத்திரம்’ என்ற வடமொழிப் பெயர் நமது நாட்டிலே வழங்குகின்றது என்றோம். இது ஒரு கற்பனைப் பெயர்; பண்டித

ரொருவர், புகையிலையைச் சுவைக்கும் வழக்கம் உடையவர்; அனுசாரம் என்று இவ்வழக்கத்தைச் சிலர் ஆட்சேபித்தபோது, பண்டிதர், புகையிலையைத் தின்னுதல் சாஸ்திர சம்மதமே என்று நிறுவ ஒரு கதையைக் கட்டினார். திரிமூர்த்திகளின் தேவியர் களான மலைமகள், அலைமகள், கலைமகள் என்ற மூவரும் ஒரு நாள் நந்தவனத்துக்குச் சென்றார்கள். அவர்கள் அங்கே தங்கள் தங்களுக்குரிய தளங்களை எடுத்தார்கள். மலைமகள் வில்வத்தை எடுத்தாள்; துளசியை அலைமகள் எடுத்தாள். கலைமகள் எடுப் பதற்குரிய இலை ஒன்றும் காணாதவளாய்த் தயங்கித் தன் நாயகனிடம் சென்று முறையிட்டாள். பிரம னும் யாகம் ஒன்று செய்து, அதிலிருந்து எழுந்த புகையைத் திரட்டி இலையாகக் கொடுத்தானாம். இதனால், புகையிலை என்றும் பிரமபத்திரம் என்றும் பெயர்கள் வழங்கின. கதை எப்படி!

1. சொல்லும் தொடரும்:

| | |
|---|---|
| அயிர் | சிரார்த்த தினம் |
| ஆசாரம் × அனுசாரம் | விதேசிப் பொருள் |
| இயற்கை நிலை | புறநாட்டுப் பொருள் |
| நச்சுப் பொய்கை | தட்ப வெப்ப நிலை |

2. சிந்தனைக்கு:

1. உணவு வகைகளில் விதேசிப் பொருள்களை விலக்கக் காரணம் என்ன?

2. விதேசிப் பொருள்களை வழங்குவது அனுசாரம் என்று நம் முன்னோர்கள் ஏன் கருதினார்கள்?

3. 'பெயர்களை வைத்தே புறநாட்டினின்றும் வந்த பொருள் களை அறியலாம்'—எப்படி?

3. பயிற்சி:

வாக்கியத்தைப் பற்றி:-2

வாக்கியம் என்ருல் என்ன என்பதை அறிந்தோம். கீழே வரும் வாக்கியங்களைக் கவனியுங்கள்.

1. மூதாதையர் விதேசிப் பொருள்களை விலக்கினர்.

2. சீன தேயத்திற்கும் நமது நாட்டுக்கும் பல நூறு வருடங்களாகவே நெருங்கிய தொடர்பு நிலவியது என்ருலும், நம் முன்னேர்கள் சீனரிடமிருந்து தேநீர் பருகும் விதத்தைக் கற்றுக் கொள்ளவே இல்லை.

3. ஐரோப்பியன் ஒருவன் புகை குடிக்கும் வழக்கத்தை ஜகாங்கீர் என்ற நமது முகலாய வேந்தனுக்குக் கற்பிக்கவே— மன்னன் எப்படி மன்னுயிர் அப்படி—அப்பழக்கம் இந்தியாவிலே பரவியது.

1. தனிவாக்கியம் :—ஒரு எழுவாய் ஒரு பயனிலையைக் கொண்டது.

2. தொடர் வாக்கியம் :—பல தனிவாக்கியங்களை ஒரே தொடராக அமைத்துக் கூறுவது.

3. கலவை வாக்கியம் :—ஒரு தனி வாக்கியத்தினூடே இடைப் பிறவரலாக வேருெரு வாக்கியம் வரப்பெறுவது.

இந்தப் பாடத்தில் பயிலும் ஒவ்வொரு வாக்கியத்தையும் கவனித்து, அதன் அமைப்புப் போக்குகளை ஆராய்ந்து பார்.

# 1. நம்பியாண்டார் நம்பி

## திருநாரையூர்

தமிழ் நாட்டிலே சிவபெருமானே தெய்வம் என்று வழிபடும் சமயத்தினைச் சைவம் என்பர். திருமாலையும் அவர் அவதாரங்களையும் வழிபடும் சமயம் வைணவம். இந்துமதம் என்ற பேரால் இவை வழங்குகின்றன. கடவுள் திருவுருவங்களை வைத்து வழிபடும் இடம் கோயில்; கோயில் இல்லாத ஊர் தமிழகத்திலே இல்லை. கோயில் என்பது, ஆலயங்களுக்குப் பொதுப் பெயராக வழங்கினும், சைவர்கள் சிதம்பரத்துக்கே சிறந்த பெயராக அதை வழங்குவர். நடன ராசனுக்கு உகந்த இடம் அல்லவா அது?

சிதம்பரத்தைச் சுற்றிலும் பல சிவத் தலங்கள் அமைந்திருக்கின்றன. அவற்றுள் ஒன்று திருநாரையூர். அவ்வூர் மிகப் பெரிய ஊரும் அன்று; சிறிய ஊரும் அன்று, அங்கே பலவகைச் சாதியினர் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் 'ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு' என்ற கொள்கை உடையவர்கள். சிவாலயத்துடன் பிள்ளையார் கோயில் ஒன்றும் அவ்வூரிலே உண்டு.

## பிள்ளையார்

சிவபெருமானது மூத்த பிள்ளையைப் பிள்ளையார் என்று சொல்லுவது மரபு. முழுமுதற் கடவுளுக்குப் பல மூர்த்தங்களைக் கற்பித்து வழிபடுவது இந்த நாட்டு வழக்கம். கடவுளுடைய பல திறப்பட்ட வடிவங்களிலே பிள்ளையார் தோற்றமும் ஒன்று. பிள்ளையார்

சிவபெருமானது கணங்களுக்குத் தலைவர்; ஆதலின், அவரைக் கணபதி என்கிறோம். தொழுவார்க் குண்டாம் விக்கினங்களைக் களைவதால், அவரை விக்கினேசுவரன் என்கிறோம். விநாயகன் என்ற சொல்லுக்குப் பொருள் என்னவென்று தெரியுமா? பெருமை பொருந்திய தலைவன் என்பது பொருள். தமிழகத்திலே பிள்ளையாருக்கு ஊர்கள் தோறும் கோயில்கள் உண்டு, சந்தி, சாலை, சாவடிகளிலே அவர் இருப்பார். ஆற்றங்கரை குளக்கரைகளிலும் அவர் இருப்பார். அவரை வழிபடாது சைவர் எதையும் தொடங்கார்; அவரை முன்வையாது எதனையும் செய்யார்; கடிதம் எழுதும்போது கூடப் பிள்ளையார் சுழி இட்டே எழுதுவது சைவர்கள் பழக்கம். 'வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுந்து வரும்' என்பது அவர்கள் நம்பிக்கை.

நம்பி

திருநாரையூரிலே விளங்கும் பிள்ளையாரைப் பொல்லாப் பிள்ளையார் என்பர். பொல்லாப் பிள்ளையார் என்றால், பொல்லாத பிள்ளையார் என்பது அன்று, உளி கொண்டு பொளியப் படாதவர்—அதாவது சுயமா யமைந்தவர் என்பது பொருள். அவருக்குப் பூசை செய்ய ஆதிசைவர் ஒருவர் இருந்தார். ஆதிசைவர் என்பவர் சிவாலயங்களிலே பூசை செய்வதற்கென்று அக்காலம் நியமிக்கப் பெற்றவர். நமது பிள்ளையார் கோயிற் 'பூசாரி' ஆகிய ஆதிசைவருக்கு ஒருநாள் அயலூர் போக நேர்ந்தது. செல்லும்போது, அவர் தமது பிள்ளையைக்கொண்டு பிள்ளையார் பூசை செய்து வரும்படி தம் மனைவியிடம் கூறிச் சென்றார்.

இவருடைய மகன் சிறியவன். பாடசாலையிலே அவன் கல்வி பயின்று வந்தான். நம்பியாண்டான் என்பது அவன் பெயர். பள்ளியிலிருந்து திரும்பியதும், நீராடி, தோய்த்துலர்ந்த ஆடையுடுத்தி, எண்ணெய், மா, மஞ்சள், தயிர், பால் ஆகிய அபிடேக திரவியங்களையும், சந்தனம், பூ, முதலிய பொருள்களையும், நிவேதனத்தையும் எடுத்துக்கொண்டு, அவன் பொல்லாப் பிள்ளையார் கோயிலுக்குப் போனான். அலகிட்டு, ஆனைந்து என்னும் பஞ்சகவ்வியம் தெளித்தான். பிள்ளையாரைத் திருமஞ்சனமாட்டினான்; திலகமிட்டான்; ஆடை கட்டினான்; பூமாலை அணிந்தான்; தூப தீபங் கொடுத்தான்; தான் கொண்டுவந்த நைவேத்தியத்தைவிக்கிரகத்தின் முன் வைத்து, அதை அருந்த வேண்டினான். விக்கிரகம் அருந்துமா? வைத்தது வைத்தபடியே இருந்தது. 'பூசையிலே ஏதேனும் தவறு நேர்ந்ததோ? அதனாலோ பிள்ளையார் நிவேதனத்தை உண்ண விரும்பவில்லை' என்று நம்பியாண்டான் ஏங்கினான். கடவுளுக்குப் படைத்துத் திரும்பவும் வீட்டுக்கு எடுத்துச் செல்வது நிவேதனம் என்பதை அவன் அறியான். தம்முன் வைத்த நிவேதனத்தை, சுவாமிஉண்டு விடுவார் என்று, அவன் உண்மையிலேயே நம்பினான். ஆதலின், நம்பியாண்டான், நிவேதனத்தை உண்டருளும்படி, விநாயகரைப் பரிந்திறைஞ்சினான்; மன்றாடி வேண்டினான். வைத்தது வைத்தபடியே இருந்தது. அது கண்டு நம்பியாண்டான் ஆத்திரங் கொண்டு அங்கிருந்த கல்லிலே் தன் தலையை மோதச் சென்றான். அப்போது 'நம்பி! பொறு,' என்று தடுத்துப் பொல்லாப் பிள்ளையார் நிவேதனத்தை உவந்துண்டார்.

விபரீதமான இந்த நடவடிக்கைகளால், நாழிகை ஆகிவிட்டது. பள்ளிக்கூடம் செல்லக் காலங் கடந்து விட்டது என்பதைத் தெரிந்த நம்பி, ஆசிரியர் தண்டனைக் கஞ்சி, தனக்குப் பாடங் கற்பிக்க வேண்டும் என்று பிள்ளையாரிடம் விண்ணப்பஞ் செய்தான். படித்தன மனத்துப் படியவும் பொருள் விளங்கவும் விநாயகர் அருள் செய்தார். பாடம் படித்து, நம்பி மாலையிலே வெறுங்கையுடன் வீட்டுக்குச் சென்றான். நிவேதனம் எங்கே என்று தாய் கேட்ட போது, அதைப் பிள்ளையார் உண்டுவிட்டதாக நம்பி கூறியதைத் தாய் நம்பவே இல்லை. மறுநாள் அவள் கோயிலுக்குச் சென்று ஒளிந்திருந்து பார்த்தாள். உண்மையைக் கண்டு மகிழ்ந்து நின்றாள். அயலூருக்குச் சென்ற தன் கணவன் திரும்பி வந்ததும் அவரிடம் நடந்ததைச் சொன்னாள். சிவவேதியரும் அதிசய மடைந்தார். அதுமுதல், சிறுவன் நம்பியே பிள்ளையாருக்குப் பூசை செய்துவந்தான். இவ்வற்புதச் செய்தி நாடெங்கும் பரவியது. இது நடந்தது பத்தாவது நூற்றாண்டின் இறுதியிலே, என்பர்.

### இராசராசன்

அப்போது சோழ சாம்ராச்சியத்தின் சக்கரவர்த்தி முதலாம் இராசராசன். நாரையூரிலே இந்த அற்புதம் நிகழ்ந்தபோது, இராசராசன், திக்குவிசயம் செய்வதிலே முனைந்து நின்றான். சேர பாண்டியரை வென்று அவன் ஈழமண்டலத்தையும் கைப்பற்றினான். வேங்கி, கலிங்க நாடுகளை வென்றான். பல வெற்றிகளால் பெற்ற செல்வத்தைக்கொண்டு, வீர சின்னமாகத் தஞ்சையிலே இராசராசேச்சுரம் என்று, தன் பெயரிலே பெருங் கோயில் ஒன்றைக் கட்டி முடித்

தான். இவன் சிறந்த சிவ பக்தன். நாரையூர் நம்பியாண்டான் நிமித்தம் பிள்ளையார் நிகழ்த்திய அற்புதத்தை இவன் கேட்டு நாரையூர் சென்றது, தேவாரங்களைத் தேடியது போன்ற விவரங்களைப் பின்வரும் பாடத்திலே படிக்கலாம்.

1. சொல்லும் தொடரும்:

| | | |
|---|---|---|
| ஆதி சைவர் | திருமஞ்சனம் | சாம்ராச்சியம் |
| அபிடேக திரவியம் | நைவேத்தியம் | திக்கு விசயம் |
| நிவேதனம் | விக்கிரகம் | வீர சின்னம் |

2. சிந்தனைக்கு:

1. கணபதியின் வடிவத்தை வருணி. அவரைப்பற்றிய புராணக் கதைகளை நீங்கள் அறிவீர்களா?

2. பழைய திண்ணைப் பள்ளிக்கூடங்களில் சிறுவர்கள் பாராயணம் செய்து வந்த வேழமுகம், பிள்ளையார் சிந்தனை என்ற நூல்களை நீங்கள் அறிவீர்களா?

3. இந்துக்களுடைய சமூக வாழ்விலே ஏனைய தெய்வ வடிவங்களை விட, விநாயக விக்கிரகம் ஏன் மிகுதியும் இடம் பெறுகிறது?

3. பயிற்சி:

வாக்கியத்தைப் பற்றி:—3

1. 'நம்பியாண்டான் நிவேதனத்தைப் படைத்தான்; அதை உண்ணும்படி அவன் விநாயகனை வேண்டினான்'—இந்த வாக்கிய அமைதியைக் கவனி: எழுவாய் முதலிலே, அதனை அடுத்துச் செயப்படுபொருள், கடைசியிலே பயனிலை அமைந்திருக்கின்றன.

2. நம்பி ஏங்கினான். ஏங்கினான் நம்பி.

இந்த இருவகை வாக்கியங்களிலே வேறுபாடு என்ன?

வாக்கியம், (பக்கம் 30)

1. தனிநிலை—எழுவாய் பயனிலை செயப்படுபொருள் நிற்பது.

2. தொடர் நிலை—தனிநிலை பல தொடர்ந்து வாக்கியமாக அமைதல்.

3. கலவை நிலை—கலந்து வருவன—

என்று மூன்று வகைப்படும்; இவற்றுக்கு, மேலே கண்ட பாடத்திலிருந்து உதாரணம் எழுது.

பொல்லாப் பிள்ளையார் என்றால், பொல்லாத பிள்ளையார் என்பதன்று - உளிகொண்டு பொளியப்படாதவர் - அதாவது சுயமாய் அமைந்தவர் என்பது பொருள்: இது என்னவாக்கியம்?

# 2. குமரகுருபரர்

சோழ பாண்டியர் ஆட்சி சிதைந்த பிற்காலத்திலே சிவநெறியும் செந்தமிழும் சீர்குலைந்தபோது, மெய்கண்ட தேவர் முதலிய பெரியார் பலர் தோன்றிச் சைவத்தையும் தமிழையும் வளர்த்தார்கள். மடங்கள் பல எழுந்தன. அதிலே வாழ்ந்த துறவிகள் பலரும் தம்மையடைந்தார்க்கே சிவஞானத்தை அறிவுறுத்தி வந்தார்கள். பாமர மக்கள் சமய உணர்வின்றி ஒரு மதத் தலைவரை நாடி நின்றனர். அப்போது 'சிவ லோகம்' ஆகிய தென்பாண்டி நாட்டிலே குமரகுருபரர் தோன்றிக் குமரிமுனை முதல் பனிமலைச்சாரல் வரை சைவமும் தமிழும் சிறப்புற்றோங்க அருஞ் சேவைபுரிந்து, பெருவாழ்க்கை வாழ்ந்தார். தமது நிறைமொழியால் நாயக்க மன்னனையும் முஸ்லிம் வேந்தனையும் தம் வயமாக்கி, அவர்களைச் செந்நெறிப் படுத்தினர். அவர் அருளிய நூல்களையும் அவரது வாழ்க்கை வரலாற்றையும் நீங்கள் அறிவது அவசியமே. இவரது சரிதத்தைக் காலஞ் சென்ற பெரும் பாவலர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை செய்யுள் வடிவிலே பாடியிருக்கிறார்.

ஸ்ரீவைகுண்டத்திலே

தாம்பிரபரணி நதி தீரத்திலே ஒன்பது கைலாசங்களும் நவதிருப்பதிகளும் அமைந்திருக்கின்றன. அவ்வூர்களிலே ஒன்று, ஸ்ரீவைகுண்டம். இது, திருச்செந்தூருக்கும் திருநெல்வேலிக்கும் நடுவே, நம்மாழ்வார் பிறந்த ஆழ்வார்திருநகரிக்கு அருகே உள்ளது. தற்போது இது ஒரு தாலுகாவின் தலை நகர்; இதன் வட பகுதி ஸ்ரீகைலாசம் என்ற பெயர்

பெறும்; அங்கே முந்நூறு ஆண்டுகளின் முன்னம் பரம்பரையாய் வந்த சைவகுலத்திலே குமரகுருபரர் தோன்றினர். இவர் தந்தை சண்முக சிகாமணிக் கவிராயர். அவர் கல்வி அறிவு ஒழுக்கங்களிலே சிறந்து விளங்கினர். குமரகுருபரர் குழந்தையாய் இருந்த போது வாய்பேசாமல் இருந்தார். ஐந்து பிராயம் ஆகியும், அருமையாய்ப் பெற்ற தங்கள் மகவு மௌனமாய் இருத்தலைக் கண்டு பெற்றோர்கள் மனக்கவலை கொண்டார்கள்.

### திருச்செந்தூரிலே

நாளடைவிலே குழந்தை பேசக்கூடும் என்று பல நாள் எதிர் பார்த்திருந்தது வீணாயிற்று. கவிராயர் வீட்டுப் பிள்ளை மூங்கையாய்ப் போய் விட்டது. தாய் தந்தையர் மிகவும் வருந்தித் தங்கள் குலதெய்வம் ஆகிய செந்திலாண்டவனிடம் குழந்தையைக் கொண்டுபோய்விடக் கருதினர்கள். திருச்செந்தூருக்குச் சென்று, அங்கேயுள்ள கலியுக வரதனைத் தரிசித்தார்கள். தங்கள் குழந்தையைச் சண்முக விலாசத்திலே கிடத்தித் தாங்களும் வரம் கிடந்தார்கள். முருகப்பெருமான் திருவருளால் குழந்தை பேசத் தொடங்கவே, அங்கே—கூடிய எல்லோரும், 'குருபர.' 'குமரகுருபர' என்ற பெயரிட் டழைத்தார்கள். குமர குருபரர் என்பது அவர் பெயராய் நிலைத்தது. தூய தவவேடத்துடன் அவர் துறவுவாழ்க்கையை நடத்தினர். தமிழ் நூல்களை எல்லாம் விரைவிலே கற்றுத் தேர்ந்தார். பா வரும் கிழமை அதாவது பாடல் இயல்பாகவே வரும் உரிமை அவருக்குக்கருவிலேஅமைந்தது. கவிராயர் மகன் கவிராயர் ஆனதிலே வியப் பொன்றுமில்லை; மூங்கை கவிஞரானது வியப்பே.

பழுத்த தமிழ்ப் புலமையிலே பண்பட்ட குமரகுருபரர் தம்மை ஆட்கொண்ட கந்தர்மீது 'கலி வெண்பா'வால் இனிய பாமாலை ஒன்று தொடுத்தார். அது பொருள் வளம் மிக்கது; பிணி நீங்கவும், கல்வி நலங் கருதியும் அது பலரால் இன்றும் பக்தியுடன் பாராயணம் செய்யப்பட்டு வருகிறது.

மதுரையிலே

சிலநாள் கழிந்தபின் குமரகுருபரர் பல புண்ணிய தலங்களைத் தரிசித்து மதுரை வந்து சேர்ந்தார். மதுரையிலே ஸ்ரீ மீனாட்சி மீது 'பிள்ளைத் தமிழ்' ஒன்று பாடினார். அவர் கீர்த்தி எங்கும் பரவி இருந்தது. அப்போது அங்கே திருமலை நாயக்கர் அரசு செய்து வந்தார். குமரகுருபரர் வருகையைத் தெரிந்த திருமலை நாயக்கர், அடிகளைத் தம்பால் வரவழைத்து, வாழ்த்தித் தொழுது, பேரவைகூட்டிப் பிள்ளைத்தமிழ் அரங்கேற்றம் தொடங்குவித்தார். அடிகள் தாம் பாடிய கவிகளைத் தம் பெருஞ் சொல்லால் தாமே விளக்கி



வரும்போது, ஒரு நாள் ஸ்ரீ மீனாட்சியே ஒரு சிறு பெண்ணாக வந்து, நாயக்க வேந்தர் மடிமீது வீற்றிருந்து, 'தொடுக்குங் கடவுள் பழம் பாடல்' என்று தொடங்கும் வருகைப்பத்தின் பாடலைக் கேட்டு, அடிகள் கழுத்திலே முத்தாரமிட்டு மறைந்தாள் என்று

சொல்லப்படுகிறது. அரங்கேற்ற முடிவிலே நாயக்க மன்னர், அடிகளுக்குப் பொன்னாலும் மணியாலும் அபிடேகம் பண்ணி, வீரக் கழலை அணிவித்து, விருதுகளாக—சிவிகை 'குடை' கொடி முதலியவை கொடுத்தார். நாயக்க மன்னர் வேண்ட, 'நீதிநெறி விளக்கம்' என்னும் அரிய நூலியற்றிப் பெரிய கிராமங்களைப் பரிசாகப் பெற்றார். அந்நூல் உலக நடையை உணர்த்தும் கண்ணாடி போல்வது. தவத்தாலும் அறிவாலும் முதிர்ந்த இவர், உலகியலை நன்குணர்ந்து தாம் சிந்தித்துத்தெளிந்தவற்றைத் தமது கவிதைப்பிரவாகத்திலே விளக்கினார். மதுரை மீது 'கலம்பகம்' ஒன்றும் பாடினார்.

### தருமபுரத்திலே

பிறகு அடிகள் வடதிசை நோக்கிப் புறப்பட்டார். செம்பொற் சிவிகை ஏறிச் சின்னம் முழங்கப் பரிசனத்துடன் சென்றார். திருச்சிராப்பள்ளி, திருவையாறு, திருவிடை மருதூர் முதலிய இடங்களிலே அங்கங்கே தங்கிச் சைவப் பிரசாரம் செய்து தருமபுரம் சேர்ந்தார். அங்கே தம்பிரான்களால் வரவேற்கப்பட்டார். ஆதீன முதல்வர் மாசிலாமணி தேசிகர்பால், காஷாயமும் ஞானோபதேசமும் பெற்றுத் தமது உடல் பொருள் ஆவி மூன்றையும் அவரிடம் ஒப்புவித்தார். அப்போது தேசிகர் மீது இவர் 'மும்மணிக் கோவை' பாடித் தமது தாழ்மை மிக்க தூய பேரன்பைப் புலப்படுத்தினார்.

### தலயாத்திரை

அதன்பின் அடிகள் திருவாரூர் சென்று அங்கே சின்னாள் தங்கி, 'நான்மணிமாலை' பாடித் தியா

கேசரை வணங்கினர். பின், வழியிலுள்ள தலங்களைப் பணிந்து வைத்தீசுவரன் கோயில் வந்து சேர்ந்தார். அங்கே முத்துக்குமார சுவாமிமீது 'பிள்ளைக்கவி' கூறி ஏற்பித்து, சீர்காழி சென்று, சிதம்பரம் சேர்ந்தார். அங்கே 'மும்மணிக் கோவை' 'செய்யுட் கோவை'கள் இயற்றி அரங்கேற்றினர். சிவகாமி அம்மைமீது 'இரட்டை மணி மாலை'யும் பாடப்பட்டது. செய்யுட் கோவை, நால் வகைப் பாவின் பலவகைகளுக்கும் உதாரணக் கவிகளை உடையது; அடிகளது அருங்கவித் திறனைத் தெரிவிப்பது.

### காசியிலே

அதன்பின் அடிகள் காசி யாத்திரையை மேற் கொண்டார். கச்சி, காளத்தி முதலிய தலங்களைப் பணிந்து, காசி நகரை அடைந்தார். கங்கையிலே மூழ்கி விசுவேசரை வழிபட்டுக் கொழுத்த தமிழால் 'கலம்பக'மும் 'பதிக'மும் பாடிக் காசியிலே தங்கியிருந்தார்.

ஆனந்த வனத்து (—காசியில்) மேய
ஆனந்த வடிவார் தம்மை, ஆனந்தச் செய்யுள் பாடி
ஆனந்தம் பயப்பப் போற்றி, ஆனந்தம் எய்து நாளில்,

குமரகுருபரர் அங்கேயே நிலையாகத் தங்கித் தருமம் செய்துவர எண்ணினர். யாத்திரையாகக் காசிக்கு வரும் தமிழர், தங்குவதற்கு இடமின்றி அவதிப்படுவதை அறிந்த அடிகள், ஒரு பெரிய மடம் கட்ட அவாவினர். டில்லி பாதுஷாவைக் கொண்டு, தம் குறிக்கோளை நிறைவேற்றிக் கொள்ள நினைத்தார். அந்த தேச மொழியாகிய இந்துத்தானியை அறிந்து கொள்ளக் கலைமகள்மீது மாலை பாடித் துதித்தார்.

"மண் கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னரும் என்
பண் கண்டளவிற் பணியச் செய்வாய்"

என்று கலைமகளைப் பிரார்த்தித்தார். இந்துத் தானி மொழியிலே பயிற்சி பெற்று அதிலே பிரசங்கம் செய்யவும் தலைப்பட்டார். குழந்தைப் பருவத்தே மூங்கையாய் இருந்து, பின் பேசி, தாய்மொழியிலே மகாகவி ஆகி, வயது முதிர்ந்த நிலையிலே வாய்க்கு வாரா இந்துத்தானியிலும் தேர்ச்சியுற்ற அடிகளின் திறலை வியக்கின்றோம்.

டில்லி பாதுஷா, அடிகளார் அருட்பொலிவினை யும், கடலனைய கல்வி நலத்தினையும், தூய தவ ஒழுக் கத்தினையும் வியந்து, அடிகளுக்குப் பல சிறப்புக் களையும் செய்தான். அடிகள் வீற்றிருந்து அறஞ் செய்யத் திருமடம் ஒன்றை அமைத்துக் கொடுத் தான். அடிகள் கங்கைக் கரையிலே கேதாரநாதர் கோயிலைச் சீர் செய்து, அங்கே தென்னாட்டுப் பூசனை நியமங்களை ஏற்படுத்தினர். அந்தக் கோயிலிடத்து மசூதி நின்றது. அதை அறிந்து அடிகள் பாதுஷா விடம் தெரிவித்து, அவ்விடத்தைத் தமக்கு உரிமை யாக்கி, மசூதியை மாற்றி மீண்டும் கோயிலாகவே புதுப்பித்தாராம். தம்முடைய மடத்திலே புராண சாலை அமைத்து, நாள்தோறும் தமிழ் நூல்களைப் படித்து, இந்துத்தானி மொழியிலே பெயர்த்துப் பிரசங்கம் செய்வார். பலர் வந்து கேட்டுப் போவார் களாம். கம்பராமாயணப் பிரசங்கம் நடந்தபோது, பிரசித்திபெற்ற இராம பக்தராகிய துளசிதாசர் அந்தக் கூட்டத்தில் ஒருவராய் இருந்து கேட்டாராம். இந்தி மொழியிலே துளசிதாசர் இயற்றிய இராம சரிதத்திலே கம்பனுடைய கருத்துக்களும் கற்பனை களும் காணப்படுவது அதை உறுதிப்படுத்துகிறது.

தாம்பிரபரணிக் கரையிலே பிறந்து, காவிரிக் கரையிலே ஞானோபதேசம் பெற்று, கங்கைக் கரையிலே தமிழர் கலாசாரத்தைப் பரப்பிக் காசியிலே மடம் அமைத்த அடிகளார் ஆற்றல் போற்றுதற்குரியது. அங்கே அடிகள் நிகழ்த்திய அற்புதங்களைப் பற்றிய விவரம் நமக்குக் கிடைக்கவில்லை; சிங்கத்தின் மீது ஏறி அடிகள் பாதுஷாவிடம் சென்றமைக்கு அறிகுறியாகக் காசி மடத்திலே கற்சிலை ஒன்று அமைந்திருக்கிறது.

### திருப்பனந்தாளிலே

அற்புதச் செயல்கள் பல புரிந்து, அறம் பல வளர்த்து, அடிகள் தமது மாணவர் பலருள்ளும் சொக்கநாத முனிவரைத் தமக்குப்பின் தாங்கண்ட தருமங்களைப்புரிய நியமித்து, வயோதிக தசையிலே விசுவேசுரர் திருவடியிலே கலந்தார். அது முதல் ஒருவர் பின் ஒருவராகத் துறவிகள் அத்தருமங்களை நடத்தி வருகின்றனர். காசிவாசிகளாகிய இப் பரம்பரையினருள் தில்லை நாயக சுவாமிகள் இருநூறு வருடங்களுக்குமுன், திருப்பனந்தாளிலே ஒரு மடம் நிறுவி, அதைத் தலைமையிடமாகக் கொண்டார். அதுமுதல், காசி குமாரசாமி மடம் கிளை மடம் ஆகியது. மொழியும் குலமும் சமயமும் வேருக உடைய மக்களிடையே சைவ சமயத்தை, அற்புதங்களாலும் வழக்கீட்டாலும் நிலைநாட்டிய அடிகள் நெறியைப் பின்வந்தோர் பின்பற்றவில்லை. இந்த மடத்தின் தலைவராய்த் தற்போதிருப்பவர்கள் ஸ்ரீலஸ்ரீ அருணந்தித் தம்பிரான் சுவாமிகள். சுவாமிகள் சிவநெறியையும் செந்தமிழையும் பிற அறங்களையும் பேணிப் பெரும் புகழ் பெற்று வருகிருர்கள்.

1. சொல்லும் தொடரும் :

| | | |
|---|---|---|
| சிவஞானம் | பனிமலைச்சாரல் | அரங்கேற்றம் |
| சிவலோகம் | பாவரும்கிழமை | கவிதைப்பிரவாகம் |
| நிறைமொழி | கருவிலேஅமைந்ததிரு | அருட்பொலிவு |
| குமரிமுனை | பாராயணம் | கல்வி நலன் |

2. சிந்தனைக்கு :

1. இந்த நாட்டிலே இஸ்லாமும் கிறித்தவமும் பரவியது எதனால்?

2. முந்நூறு வருடங்களுக்கு முன்னரே காசியாத்திரையை மேற்கொண்டு, மொழியும் குலமும் சமயமும் வேருக உடைய மக்களிடையே தங்கித் தமிழர் கலாசாரத்தைப் பரப்பிய அடிகள் முயற்சி பிற்காலத்திலே ஏன் பின்பற்றப்படவில்லை?

3. பிரபந்தங்கள் பல இயற்றிய அடிகள் காவியம் ஒன்றேனும் பாடவில்லை; காரணம் எதுவாயிருக்கலாம்; குமரகுருபரர் காலத்தவராக நீ அறிந்த ஏனைய கவிஞர் யார்?

4.

| | |
|---|---|
| கலிவெண்பா | மும்மணிக்கோவை |
| பிள்ளைத்தமிழ் | நான்மணி மாலை |
| கலம்பகம் | பதிகம் |

—என்ருல் என்ன?

3. பயிற்சி :

வாக்கியத்தைப் பற்றி-4
குமரகுருபரர் தோன்றினர்.
கற்சிலை ஒன்று அமைந்திருக்கிறது.

—எழுவாய் பயனிலைகளைக் கவனி; எழுவாயும் பயனிலையும் திணை பால் எண் இடங்களிலே ஒத்திருக்கின்றன அல்லவா?

குமரகுருபரர் தோன்றியது
கற்சிலைகள் அமைந்திருக்கிறது

—இவை தவறு. ஏன்? இந்தப் பாடத்தின் முதல் பக்கத்திலே பயிலும் ஏதேனும் நான்கு வாக்கியங்களை எழுதி, அவற்றிலே எழுவாயும் பயனிலையும் பொருந்தியிருப்பதை எடுத்துக்காட்டு.

# தேவாரங்களைத் தேடியது

## தேவாரம்—?

கடவுள்பால் அன்புகனிந்து பாடிய பாடல்களைத் தேவாரம் என்பார்கள். இவற்றைப் பாடியவர் அப்பர், சம்பந்தர், சுந்தரர். இவர்களை 'மூவர் முதலிகள்' என்பர். (இவருடன் மணிவாசகரையும் சேர்த்து, சமயகுரவர் நால்வர் என்பர்.) கடவுளிடத்து வைத்த பேரன்பினால் இவர்கள் மனமுருகிப் பாடிய இந்தப் பாடல்கள் இசைத் தமிழுக்கு இலக்கியம். அவை பல பண்களால் ஆனவை; பத்திச் சுவையும் பொருட் பொலிவும் உடையவை. கோயில்களிலே பதிகங்களை (பதிகம் - பத்துப்பாட்டு) ஓதும்படிக் கட்டளைகள் ஏற்பட்டன; நாடெங்கும் அவை பரவியிருந்தன. ஆனால் நாளடைவிலே அவை கைவிடப்பட்டன; பாதுகாப்பார் இன்மையால் அவை வழக்கொழிந்தன.

## திருநாரையூரிலே

முதலாம் இராசராசன் என்ற சோழவேந்தன், வீரனாய் விளங்கியது போலவே சிவபத்தனாகவும் திகழ்ந்தான் என்றோம். தஞ்சையிலே இவன் கட்டிய இராசராசேச்சுரம் என்ற பெருங் கோயில் அவனுடைய வெற்றி, வீரம், பத்திகளுக்குச் சின்னமாக இன்றளவும் திகழ்கின்றது என்றோம். ஒரு சமயம், இவன் தன்பால் வந்த சிலர் தேவாரப் பதிகங்களைப் பண்ணோடு ஓதக் கேட்டான். தேவாரம் முழுவதையும் வெளிப்படுத்த வேண்டும் என்று விரும்பினான். அவற்றைத் தேடும்படி நாடெங்கும் ஆள்விட்டான்.

அவை கிடைக்கவில்லை; அதனல், மனம் உடைந்திருந்த மன்னன் செவியிலே நாரையூர் நம்பியின் அற்புதச் செயல் வீழ்ந்தது. இவ்வதிசயத்தை நேரிலே காண விரும்பி, இராசராசன் தன் பரிசனருடன் வாழைப்பழம், தேன், அவல், அப்பம், எள்ளுருண்டை முதலிய பண்டங்களை எடுத்துக்கொண்டு, நாரையூரை அடைந்தான். நம்பியை அழைத்து, விநாயகனுக்கு அபிடேக ஆராதனை செய்வித்தான். தான் கொணர்ந்த நிவேதனத்தைப் பிள்ளையார் உண்டருளியதைக் கண்ட இராசராசன் உடல் பூரித்தான்; உரோமம் சிலிர்த்தான்; நம்பியைப் பணிந்தான். 'ஐயனே! அடியேனுக்கு நீண்ட நாளாக ஒரு விண்ணப்பம் உண்டு; அதனைக் கேட்டு, வழி செய்தல் வேண்டும். தேவாரம் இருக்குமிடம் தெரியவில்லை; எங்கும் தேடினேன்; கிடைக்கவில்லை' என்ருன். 'மன்னவனே சற்றுப்பொறு' என்று, அரசன் விரும்பிய செய்தி தம்மனத்திலே உதயமாக நம்பியாண்டார் பிள்ளையாரை வேண்டினர். வேண்டலும், சிதம்பரத்திலே கூத்தப் பெருமானுக்குப் பின்னேயுள்ள அறையில் தேவாரத் திருமுறைகள் சேமித்து வைத்திருப்பது தெரியவந்தது. நம்பி இதனை அரசனுக்கு அறிவித்தார்.

## சிதம்பரத்திலே

இராசராசன், நம்பியாண்டாரையும் தன்னுடன் அழைத்துக்கொண்டு, சிதம்பரம் சென்ருன். தீட்சிதர்களை அழைத்துக் கேட்டுத் தேவாரம் குறிப்பிட்ட அறையிலே இருப்பதைத் தெரிந்தான். அறையைத் திறக்கத் தீட்சிதர்கள் விரும்பவில்லை; அது, மூவர் கையடையாளங்களோடு முத்திரை இடப்பட்டிருப்பு

தாகவும், ஆதலின், மூவர் வந்த பிறகே அதனைத் திறக்க இயலும் என்றும் அவர்கள் தெரிவித்துவிட்டார்கள் மன்னவன் புத்திமான் ஆகையால், மூவர் திருவுருவங் களுக்குச் சிறப்புள அபிடேக ஆராதனைகள் செய்து. திருவுலாச் செய்வித்தான். அரசன் எண்ணத்தை அர்ச்சகர்கள் அறிந்து கொள்ளவில்லை. மூவர் முதலி கள் திருவுலாப்போந்து திருமுறையிருக்கும்அறைக்கு எதிரிலே வந்தபோது, அரசன் அர்ச்சகரை அழைத்து, 'மூவரும் வந்தார்; அறையைத் திறந்திடுக' என்றான். தில்லை மூவாயிரவரும், வேறுவழியின்றி அறையைத் திறந்து விட்டனர். அறைக்குள்ளே தேவாரத் திருமுறைகள் கரையான் புற்றிலே புதைந் திருந்தன. அதைக் கண்ட அரசன் மனங் கவன்று குடங்குடமாக எண்ணெய் விட்டு, புற்று மண்ணைக் கரைத்து, ஒவ்வொரு ஏடாக எடுத்தான். பல ஏடுகள் சிதைந்திருந்தன. அதனால் அரசன் மனம் நொந் தான். 'இக்காலத்துக்கு ஏற்ற பதிகங்களை வைத்து விட்டு, எஞ்சியதை மண்மூடச் செய்தோம்' என்ற அசரீரி கேட்டது. அதனால், மகிழ்ந்த மன்னவன் ஆடினான், பாடினான், அவன் மனத்தைத் தின்று வந்த கவலைகள் தீர்ந்தன; அமுதம் பருகினவன்போல நெஞ்சம் தேறினான்.

இசை வகுத்தல்

அரிதின் முயன்று, ஏடுகளை எடுத்துச் சேர்த்த போது, சம்பந்தர் பதிகங்கள் 384 கிடைத்தன. நாவுக் கரசர் பதிகங்கள் 323 கிடைத்தன. சுந்தரர் பதிகங் கள் நூறே கிடைத்தன. இவற்றை அரசன் ஏழு திருமுறைகளாக (3+3+1) வகுத்தான். இவற்றைப் பாடும் வகை தெரியாது திகைத்த அரசன், திருநீல

கண்ட யாழ்ப்பாணர் மரபிலே வந்த பெண்ணொருத்திக்குத் தேவாரங்களிலே சில பண்ணுடன் ஓதவரும் என்று தெரிந்து, அவளைச் சிதம்பரத்துக்கு அழைப்பித்தான். நீலகண்ட யாழ்ப்பாணர் ஞானசம்பந்தருடன் தல யாத்திரை செய்து, அவர் பாடிய பனுவல்களை யாழில் அமைத்துப் பாடியவர். அவர் மரபிலே வந்த இந்த மங்கை இசைஞானம் உடையவள். ஆதலின், அவள் தேவாரங்களைப் பாடிக் காட்டினாள். தேவாரங்களுக்கு இசை வகுக்கப்பட்டன. அதன் பின் பலரும் அவருக்குப் பிரதி எடுத்துக்கொண்டனர். ஊர்கள்தோறும் தேவாரப் பதிகங்கள் பரவின. சிவாலயங்களிலே அவை ஓதப்பட்டன.

**ஆதாரநூல்**

தேவாரத் திருமுறைகளைச் செவ்வையாகப் பயின்று, நம்பியாண்டார் நம்பி 'திருத்தொண்டர் திருவந்தாதி' என்ற நூலை இயற்றினார். இராசராசன் வேண்டுகோள்மீது, நம்பி அறுபத்துமூன்று நாயன்மாரது சரித்திரத்தைச் சுருக்கி, அந்தாதி பாடினார். சேக்கிழார் பெரியபுராணம் செய்வதற்கு இது ஆதாரமாகியது. பின் வரும் பாடத்திலே பெரிய புராணத்தைச் சேக்கிழார் ஏன் பாடினார்? எங்கே பாடினார்? என்ற விவரங்களைப் படிக்கலாம்.

தேவாரங்கள், சமய தத்துவங்களை இன்னிசையிலே போர்த்து, நமது மனத்தை இயற்கை எழிலிலே ஈர்த்துக் கடவுளிடத்து நம்மை ஈடுபடுத்துவன. ஆணவத்தைப்போக்கி நல்வாழ்வைத் தருவன.

**சிவாலயங்களிலே**

முதலாம் இராசராசன் சிறந்த சிவபத்தனாக இருந்தமை தமிழ்நாடு செய்த தவப்பயனே. பொல்

லாப் பிள்ளையார் திருவருளாலும், நம்பியாண்டார் தம் பெருந் துணையாலும், தேவாரத் திருமுறைகளை அவன் வெளிப்படுத்தியிராவிட்டால்,

இன்று ' நீறெங்கே ?
மாமறை நூல்தான் எங்கே ?
எந்தைபிரான் ஐந்தெழுத்தெங்கே ?'

இராசராசன் தான் எடுப்பித்த தஞ்சை இராசராசேச்சுரத்திலே நாற்பத்தெட்டு ஓதுவார்களைக்கொண்டு, திருப்பதிகம் விண்ணப்பிக்க ஏற்பாடு செய்தான். இவன் மரபிலே வந்த பிற மன்னரும் பல தலங்களிலே திருப்பதிகம் ஓத ஏற்பாடு செய்தனர். சிவாலயங்கள் தோறும் இன்றும் தேவாரம் ஓதப்படுகிறது.

1. சொல்லும் தொடரும் :

| | | |
|---|---|---|
| மூவர் முதலிகள் | இலக்கியம் | அபிடேக ஆராதனை |
| திருமுறை | தேவராப்பதிகம் | திருவுலா |

2. சிந்தனைக்கு :

1. தேவராங்களைப் பண்ணுடன் ஓதக் கேட்டிருக்கின்றீர்களா? தேவாரப் பதிகங்கள் சிலவற்றை மனப்பாடம் செய்து வையுங்கள்.

2. சைவசமயத்தைப்பற்றி நீங்கள் அறிந்திருப்பது என்ன?

3. பயிற்சி :

வாக்கியத்தைப் பற்றி—5

1. 1 இராசராசன் சிவபத்தனாகத் திகழ்ந்தான்
2 கோயில்...திகழ்கிறது
3 நான்...தேடினேன்
4 மன்னவன்...திருவுலாச் செய்வித்தான்

மேலே கண்ட வாக்கியங்களிலே எழுவாய் பயனிலைகள் (திணை, பால், எண் இடங்களிலே) எப்படி பொருந்தியிருக்கின்றன என்பதைக் கவனியுங்கள். (பக்கம் 43.)

நிரப்பி எழுது :

2 1 இராசராசன் சிதம்பரம்——
2 'மூவரும்——; அறையத்——'
3 '——மண்மூடச் செயதோம்'
4 தேவாரம் நல்வாழ்வை——

5. வெளி நாடுகளில்

# பர்மாவிலே

## பர்மியர்

நமது நாட்டின் கிழக்கே உள்ளது பர்மா. அது இயற்கை வளம் நிறைந்த அழகான தேசம். இதற்கு மேற்கே வங்காளக்குடாக் கடல் இருக்கிறது. வடக்கும், வடமேற்கேயும் சீனு, அஸ்ஸாம் முதலிய நாடுகளிருக்கின்றன. தெற்கே மலாய்த் தீபகற்பமும்,



கிழக்கே சயாம் நாடும் எல்லையாக உள. பர்மாவின் பழங்குடிகள் பர்மியர்; இவர்களது மதம் பௌத்தம். இவர்களுக்குள் சாதி வேற்றுமைகளில்லை; சமயப் பாகுபாடுகளும் சமூகக் கட்டுப்பாடுகளும் இல்லை. பர்மியர் கட்டையான உருவினர். அவர்கள் நிறம் மஞ்சள். செட்டாகச் செலவுசெய்து பொருளீட்ட

அவர்கள் விரும்பார். இவர்கள் மங்கோலியர் என்ற மக்களினத்தைச் சார்ந்தவர்; ஆனால் பழக்க வழக்கங்களில் சீனர் முதலிய மங்கோலிய வகுப்பினரினின்றும் மாறுபடுகின்றனர். இந்துக்களின் கதைகளை ஒட்டியே இவர்களிடையேயும் கதைகள் வழங்குகின்றன.

## இருநாடுகளிடையே

இந்தியாவிற்கும் பர்மாவிற்கும் பல நூற்றாண்டுகளாகத் தொடர்பு இருந்து வருகிறது. பண்டை நாளில் கங்கைக் கரையில் வாழ்ந்தோர் பர்மாவிலே குடியேறினர்; பௌத்த மதத்தைப் போதித்தனர். பர்மியருக்கு நூல் நூற்கவும் ஆடை நெய்யவும் கற்பித்தனர். காவிரி, கோதாவரி நதிகளுக்கருகே வசித்த இந்துக்களும் கடல்கடந்து பர்மா சென்றனர்; ஐராவதி நதி தீரங்களில் குடியேறினர். சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்னரே இந்தியாவுக்கும் பர்மாவுக்கும் நெருங்கிய தொடர்பு நிலவியது. இது சரித்திர ஆசிரியர் கூற்று. தற்போது பர்மாவிலுள்ள இந்திய மக்களிற் பெரும்பாலோர் தென்னிந்தியரே.

இந்தியாவையும் சீனாவையும் இணைப்பது பர்மா. எனவே இந்தியரும் சீனரும் பர்மியர் வாழ்வை உருவாக்கினர் என்பது பொருந்தும். மதக்கோட்பாடு, அறத்தைப்பற்றிய கொள்கை, கலைஞானம், நாகரிகம், வாழ்க்கை முறை முதலியவை இந்தியாவினின்றும் சீனாவினின்றும் பர்மாவில் பரவின; அவர் வாழ்வை வளம்பெறச் செய்தன. இந்தியாவிலே பிறந்த புத்த மதமே பர்மா, ஸயாம், கம்போடியா, மலாய் முதலிய இடங்களிற் பரவியது. வங்காளக்குடாக்கடலை மட்டுமின்றி, அது சீனர் கடலையும் கடந்து சென்றது.

௯௯3௭௪

இந்தியாவிலுள்ள வைதிகக் கொள்கைகள் நெடுங்காலத்திற்கு முன்பே பர்மாவில் பரவியது. புரோம் முதலிய இடங்களில் வைதிக தெய்வங்களின் சிலை இருந்த சின்னங்கள் தென்படுகின்றன. குடியேறிய இந்தியர் இந்தியப் பெயரையும் சில பர்மிய நகரங்களுக்குச் சூட்டினர். பெகுவை அன்ஸாவதி என்றும், புரோமை ஸ்ரீக்ஷேத்திரம் என்றும் அழைத்தனர். பர்மாவின் பழைய கோயில்களிலே காணப்படும் சித்திரம் இந்திய வேலைப்பாடே.

பண்டைய இந்தியாவிலே பிரசித்தி பெற்றிருந்த சருவ கலாசாலை தட்சசீலம். இதில் ஆயிரக்கணக்கான பர்மிய மாணவர் பயின்றனர். பர்மிய அரசர்கள் வடமொழி நூல்களை ஆவலோடு படித்தனர். அவர்களுடைய நீதிமன்றங்களில் திராவிடரின் நீதி முறைகள் கையாளப்பட்டு வந்தன. பர்மியர் நாகரிகத்தையும் சரித்திரத்தையும் உருவாக்கிய பெருமை இந்தியாவிற்கே உரியது.

முதன்முதல் 16-வது நூற்றுண்டில் போர்த்துக்கீசியர் பர்மாவிலே குடியேறினர். பின், கிழக்கிந்தியக் கம்பெனியார் அங்கே சில தொழிற்சாலைகளை நிறுவினர். ஆங்கில-பர்மியப் போர், ஆங்கில ஆதிக்கம் பர்மாவில் பரவிய விதம், முதலியவற்றை இந்திய சரித்திரத்தில் படிக்கலாம்.

ஆங்கில ஆட்சியிலிருந்து சமீப காலத்திலேதான் பர்மா விடுதலை பெற்றுச் சுதந்திர நாடானது. பர்மியர் பலதிறப்பட்ட வகுப்பினரடங்கிய ஒரு பெருங்கூட்டத்தினர். எத்தேசத்தினருடனும் கலப்பு மணம் செய்துகொள்ளும் இயல்பினர். தேசபக்தியுடையவர். தேச முன்னேற்றத்தில் நாட்டமுள்ளவர்.

பர்மாவிலே இந்தியர்

பர்மாவின் தலைநகரம் இரங்கூன். அங்குள்ள மக்கள் தொகையில் மூன்றிலொரு பங்கினரே பர்மியர்; பாதிக்கு மேற்பட்டவர் இந்தியர். இப்போது பர்மா வியாபாரத் துறையில் முன்னேற்றமடைந்திருக்கிறது. தொழிற்சாலைகள் அங்கே மலிந்திருக்கின்றன. இத்தகைய நிலைக்குப் பர்மாவைக்கொண்டு வந்த பெருமை இந்தியருக்கே உரியது. இது யாவரும் ஒப்பிய உண்மை.

பர்மாவிலுள்ள தோட்டங்களிலும், தொழிற்சாலைகளிலும், சுரங்கங்களிலும், ரயில் நிலையங்களிலும், எண்ணெய் ஊற்றுக்களிலும். உழைக்கும் தொழிலாளர்களில் பாதிக்கு மேற்பட்டவர் இந்தியர். பர்மியத் தொழிற்சாலைகள் இந்தியத் தொழிலாளர்களையே நம்பி நடைபெறுகின்றன. இவர்களிலே தமிழர்கள்தான் அதிகம். விவசாயத்தில் ஈடுபட்டுள்ளோரில் பெரும்பாலோர் தமிழர்கள். பர்மாவின் போலீஸ், இராணுவ இலாக்காக்களிலும் இந்தியரே மிகுந்திருந்தனர். பர்மாவில் அகப்படும் வெள்ளியையும் பெட்ரோல் எண்ணெயையும் இந்தியா வாங்கி வருகிறது. மேலும், தேக்கு, அரிசி முதலியவையும் அங்கிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

விவசாயத்தையும் சில்லரை வியாபாரங்களையும் நடத்துவதற்கு, பெரும் பணம் வேண்டுமல்லவா? பர்மியர்களுக்குப் பணம் கடனாகக் கொடுத்து உதவுவது தமிழ்நாட்டுச் செட்டியார்கள் என்ற தனவைசியர்கள். இவர்கள் செய்யும் உதவியை மாஜி பர்மா கவர்னர் 1927-ம் ஆண்டிலே பெரிதும் பாராட்டினர். அவர் கூறியதாவது:—'நாட்டுக்கோட்டைச் செட்டி

யார்கள் பர்மாவின் வாழ்க்கைக்கு இன்றியமையாத வர்கள். அவர்களுடைய உதவி இல்லாவிட்டால், பர்மா இந்நாட்களில் இவ்வளவு முன்னேற்றம் அடைந்திருக்க முடியாது.'

பழைய காலம் தொட்டு இன்றளவும் இந்தியாவுக்கும் பர்மாவுக்குமுள்ள நெருங்கிய தொடர்புகளை ஒருவாறு தெரிந்துகொண்டோம். இனி எதிர்காலத்திலும் இந்த இரண்டு தேசங்களும் முன்னேற்றத்திற்குரிய பல துறைகளிலும் பரஸ்பர நம்பிக்கையோடு ஒத்துழைக்க வேண்டும். அப்படியானால், பழைய தொடர்புகள் புத்துயிர் பெறும். இரண்டு தேசங்களும் சேமமுறும்; புதுவாழ்வுபெறும்.

1. சொல்லும் தொடரும் :

| | | |
|---|---|---|
| பழக்கவழக்கம் | திராவிடர், மங்கோலியர் | சமயப்பாகுபாடு |
| தனவைசியர் | சமூகக்கட்டுப்பாடு | மதக்கோட்பாடு |

2. சிந்தனைக்கு :

1. 'பர்மாவின் செழிப்புக்கும் செல்வத்துக்கும் இந்தியரே காரணர்' எப்படி?

2. பர்மியர் இந்தியர்—இவர்கள உறவு இன்று எப்படியிருக்கிறது?

3. பயிற்சி :

1. பரஸ்பரம்—சமஸ்கிருதம் கவர்னர்—ஆங்கிலம்
காவிரிக்கரை—தமிழ் மாஜி—இந்துத்தானி

2. கிழக்கிந்தியக் கம்பெனியார் அங்கே தொழிறசாலைகளை நிறுவினர். பர்மாவின் போலீஸ் இராணுவ இலாக்காக்களில் இந்தியரே மிகுந்திருந்தனர்—அயன்மொழிச் சொற்களை எடுத்தெழுது.

# சேக்கிழார் பெரியபுராணம் பாடியது

## கோட்டம்-நாடு-ஊர்

சென்னையும் சென்னையைச் சேர்ந்த பிறவூர் களும் அமைந்துள்ள பிரதேசம் தொண்டை மண் டலம் எனப்படும். இந்த நாடு இருபத்து நான்கு கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. சென்னை புழற்கோட்டத்தில் உள்ளது. ஒவ்வொரு கோட்டமும் பல சிறுநாடுகளாகப் பகுக்கப்பட்டது. சென்னை எழுமூர் நாட்டில் உள்ளது. எழுமூர் இன்று எழும் பூர்—எக்மோர் என்று சொல்லப்படுகிறது. புழல் இருந்த இடத்து, இன்று புழல் ஏரி இருக்கிறது. அதுதான் சென்னையம்பதிக்கு வேண்டும் தண்ணீர் தருகிறது. புழற்கோட்டத்தை ஒட்டி, புலியூர்க் கோட்டம்; அதன் நாடுகளிலே ஒன்று குன்றத்தூர்; குன்றத்தூர் பல்லாவரத்தின் மேற்கே ஆறு மைல் தொலைவில் இருக்கிறது.

## குன்றததூர்

குன்றத்தூர் இன்று சிற்றூரே; என்றாலும், அது 10, 11-ம் நூற்றாண்டிலே இரு பேரூராக இருந் தது. குன்றத்தூரின் மேல் கோடியிலே ஒரு சிறு குன்று இருக்கிறது. அதன் அடிவாரத்திலே அழகிய மண்டபம் ஒன்று உண்டு. குன்றின் உச்சியிலே குமரன் கோயில் ஒன்று இருக்கிறது. குன்றை யடுத்து மேல்புறம் நீர்வளம் நிலவளம் செழித்த பள் ளத்தாக்கு; கீழ்ப்புறம் தோப்பும், துரவுகளும் ஊரைச் சூழ்ந்து தோன்றுகின்றன. குன்றத்தூரைத் தற்

போது நத்தம் என்று சொல்லுகிருர்கள். பழைய காலத்திலே ஓரூரானது, நத்தம், மடப்புறம், மடவளாகம், சேரி என்று பல பிரிவுகளாகப் பிரிக்கப்பெற்றது. வீடுகள் அடங்கிய இடம் நத்தம்; துறவிகளும் அவர் பரிசனரும் வாழுமிடம் மடப்புறம்; மடவளாகம் என்பது கோயிலைச் சார்ந்த இடம்.

### கிழார்

இந்தப் பிரதேசம் முன்ஞெரு காலத்திலே காடாக இருந்தது. மாவளத்தான் என்ற சோழ வேந்தன் இதனைக் காடு கெடுத்து நாடாக்கித் தென்ஞட்டினின்றும் நற்குடி நாற்பத்தெண்ணுயிரவரைக் கொண்டுவந்து இங்கே குடி ஏற்றினுன். இந்தக் குடி மக்கள் அங்குள்ள காணிகளுக்கு உரிமை உடையவர்; முதன்மைப் பட்டமும் எய்தினவர்; இவர்கள் கிழார் என்று அழைக்கப் பெற்றனர்; இவர்களுக்குக் கீழே உழுதுண்போர் உழுவித்துண்போர் பலர் உண்டாயினர்.

### சகோதரர் இருவர்

குன்றத்தூரிலே குடி ஏறியவர்களுள் கூடல் கிழான், புரிசைகிழான், சேக்கிழான் என்ற முதன்மைக் குடிமக்கள் பலர் வாழ்ந்து வந்தனர். இக்குடியினர், அறிவு ஒழுக்கங்களிலே மேம்பட்டு, சிவபத்தியிலும் சிறந்து விளங்கினர். சேக்கிழார் குடியிலே, அருண்மொழி, பாலருவாயர் என்ற சகோதரரிருவர் தோன்றினர். அருண்மொழி என்பது அக்காலத்து அரசர் பெயர். அரசர் பெயரைத் தம் மக்கட்கிடுவது அந்த நாள் மரபு. இளமையிலே சகோதரர் இருவரும் சகல கலைகளையும் கற்றுத் தேர்ந்தனர். மறைந்து போன தேவாரத் திருமுறைகள் இவர்கள் பிறப்பதற்

குச் சற்று முன்புதான் வெளிப்படுத்தப்பட்டன. ஆதலின், தேவாரங்களை நன்கு ஆராய்ந்து இவர்கள் சமய ஞானத்தைப் பெருக்கிக் கொண்டார்கள்.

அருண்மொழியின் அறிவாற்றல்களையும் ஒழுக்க சீலங்களையும் அறிந்த சோழ வேந்தன் அவரைத் தன் பால் வரவழைத்து, மந்திரியாக அமர்த்தி, அவருக்கு உத்தம சோழப் பல்லவர் என்ற பட்டத்தையும் ஈந்தான். மண்ணுசையினுல் அரசன் போரிலே நாட்ட முடையனுய் விடவே, நாடாட்சி அருண்மொழி என்ற உத்தம சோழப் பல்லவரைச் சார்ந்தது.

உத்தம சோழப் பல்லவர் சமயத்திலே சைவர்; அவர் காலத்திலே, அன்பே சிவம் என்பதான சைவ சமயம் தழைத்தோங்கி வளர்ந்தது. கும்பகோணத் துக்கடுத்த திருநாகேசுரத்துச் சிவபெருமான் மீது, அவர் ஆரு அன்புடையவர். தம் பிறப்பிடமாகிய குன்றத்தூரிலே ஒரு கோயிலெடுத்து, அதற்குத் திரு நாகேசுரம் என்று பெயரிட்டு, வேண்டும் நிலபுலங் களை விட்டார். அவற்றைக் கண்காணிக்க மடவளா கத்தை உண்டாக்கினுர். அந்தச் சிவாலயத்தை இன் றும் காணலாம். சிவ பத்தியிலே சிறந்தது போலவே, அடியார் பத்தியிலும் அவர் சிறந்து விளங்கினுர்.

### வேந்தன் வேண்டுகோள்

மந்திரியின் நிலை இது; மன்னவனே அருங்கலை விநோதன். பொழுது போக்காக அவன் 'சீவக சிந்தாமணி' என்ற சமண நூலைப் படித்து வந்தான். அது திருத்தக்கதேவர் என்ற முனிவரால் எழுதப்பட்டது; அதைப் படித்து அனுபவிப்பதால் சமண மதத்தை அரசன் தழுவி விடக்கூடும் என்று அமைச்சர் அஞ்சி

ஞர். ஆதலின் அரசனை அடைந்து, அவன் படித்து வரும் காவியம் அவலமானது என்று கூறி, சைவ சமயப் பெரியாரது சரிதங்களை எடுத்துப் பேசினர். அது கேட்ட அரசன், அந்தச் சரிதங்களை ஒருசேரத் திரட்டிப் பெரும் புராணமாக இயற்றித் தருமாறு வேண்டினன்.

## பெரியபுராணம்

உத்தம சோழப் பல்லவரும் அதற்கு ஒருப்பட்டுப் புராணம் பாடுவதற்குத் தகுதியான இடம், தேவாரத் திருமுறைகள் தேடிஎடுக்கப்பட்ட சிதம்பரமே என்று, அரசனிடம் விடை பெற்றுப் பரிசனத்துடன் சிதம்பரம் சென்று தங்கினர். மூவர் முதலிகள் அருளிய தேவாரங்களை ஆராய்ந்தார். அடியார்களது பிறப்பு வளர்ப்புக்களையும் பெருமைகளையும் ஆராய்ந்தார். தாம் கண்டதையும் கேட்டதையும் ஒருங்கே திரட்டி, நினைவுகூர்ந்து கடவுள் சந்நிதியிலே புராணத்தைத் தொடங்கினர். அப்போது 'உலகெலாம்' என்ற அசரீரி கேட்டது. 'உலகெலாம்' என்று தொடங்கி, சுந்தரர் சொன்ன 'திருத்தொண்டத்தொகை' அடைவைப் பிடித்து, சிறந்த காவியம் ஒன்று பாடினர். ஒரு வருடத்திலே பாடி முடித்தார். சித்திரை மாதம் திருவாதிரை நாளிலே தொடங்கினர். மரபு தவருமலும் காவியச்சுவை கெடாமலும் புராணம் நிறைவேறியது என்ற செய்தியைத் தெரிந்த அரசன், பரிவாரம் புடைசூழச் சிதம்பரத்தை அடைந்து, நல்லோரையில் நடராசப் பெருமான் சந்நிதியில் நூலை அரங்கேற்றம் செய்வித்தான். அமைச்சராய் இருந்த உத்தம சோழப் பல்லவருக்குத் 'தொண்டர் சீர் பரவுவார்' என்ற பட்டத்தையும் அளித்தான். அன்று

முதல் அவர் தொண்டர் சீர் பரவுவார் என்ற பெயரால் அழைக்கப்பட்டார்; என்றாலும், சேக்கிழார் என்ற குடிப் பெயரே பிற்காலத்தில் பிரபலம் பெற்றது. சேக்கிழார் தாம் இயற்றிய பெரியாரது சரிதங்களடங்கிய நூலுக்குத் 'திருத்தொண்டர் புராணம்' என்று பெயரிட்டார். ஆனால் தமிழர் அதனைப் 'பெரிய புராணம்' என்றே சொல்லுகின்றனர், சேக்கிழார் சிதம்பரத்திலேயே தங்கித் தமது பெரிய புராணத்தைப் படிப்பதிலும் அதனைப் பொருள் விளங்கக் கூறுவதிலும் எஞ்சிய வாழ்நாளைக் கழித்தார்.

சேக்கிழாரைக் கொண்டு பெரிய புராணம் பாடச் செய்த சோழ வேந்தன், அனபாயன் என்ற இரண்டாம் குலோத்துங்கன். இவன் காலம் பன்னிரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதி.

1. சொல்லும் தொடரும் :

| | | |
|---|---|---|
| மண்டலம் , | நத்தம் | அருண்மொழி |
| கோட்டம் | மடப்புறம் | உத்தமச் சோழப் பல்லவர் |
| நாடு | மடவளாகம் | தொண்டர் சீர் பரவுவார் |

2. சிந்தனைக்கு :

1. ஆட்சி முறைக்கு, இன்று, மாகாணம், ஜில்லா, தாலுகா, கிராமம் என்று பகுக்கப்பட்டிருக்கிறது; சோழர் காலத்திலே அது எப்படி பகுக்கப்பட்டது ?

2. பழங்காலத்திலே ஒரு கிராமத்தின் அங்கங்கள் எவை ? குன்றத்தூரை உங்கள் கிராமத்துடன் ஒப்பிடு ?

3. பயிற்சி :

| | |
|---|---|
| 1. பக்தி – பத்தி | தத்வம்—தத்துவம் |
| சக்தி—சத்தி | பக்வம்—பக்குவம் |

இந்தச் சொல் வடிவங்களிலே எது சரி? ஏன் ?

4. இலக்கணம் : பெயர்ச்சொல் :

அனபாயன், குன்றத்தூர், சித்திரை, கை, அழகு, வருதல் —இவை, முறையே பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் இவற்றைக் குறிக்கின்றன அல்லவா? பொருளின் பெயரைக் குறிக்கும் சொல் பெயர்ச் சொல்.

இந்தப் பாடத்திலே பயிலும் பெயர்ச் சொற்களை எடுத்தெழுதி அவை இன்ன பெயர் என்று குறிப்பிடு.

# 1. மின்சாரம்

நகரங்களிலுள்ள வீடுகளிலும் வீதிகளிலும் கண்ணைப் பறிக்கும் ஒளியுடன் எரியும் விளக்குகளை நீங்கள் கண்டதுண்டா? அவைதாம் மின்சார விளக்கு எனப்படும். அதற்கு எண்ணெயும் நெருப்பும் தேவையில்லை. விளக்கினுள் சிறிய கம்பியும் வெளியே அதனுள் நுழையும் பெரிய நீண்ட கம்பிகளும் உங்களுக்குத் தென்படும். மின்சாரம் கம்பியின் வழியாய்ச் செல்லும்போது, (விளக்கை ஏற்றினால்) ஒளியுண்டாகிறது. மின்சாரமும், (மின்னலின் சாரமாகிய) மின்சக்தியும் ஒரே இனத்தைச் சேர்ந்தவை. ஆனால் அவை குணத்திலும் செயலிலும் வேறுபட்டவை. கம்பிகளின் வழியாய் விளக்கேற்றும் மின்சாரத்தை 'ஓடும் மின்சாரம்' என்று சொல்லுகிறார்கள்.

### விஞ்ஞானிகள் முயற்சி

சுமார் 130 வருடங்களுக்குமுன், கால்வனி என்பவர் தவளையின் கால்களில் இரண்டு வேறுபட்ட உலோகங்களைக் கொண்டு தொட்டார். அப்போது அந்தக் கால்கள் 'வெடுக்' கென்று சுருங்கிப் பின் உதைத்தன. இரண்டு உலோகங்கள் மிருக சரீரத்தோடு சம்பந்தப்படும்போது, மின்சாரசக்தி உண்டாகுமென்று அவர் ஊகித்தார். பின் வால்டா என்னும் விஞ்ஞானி இரண்டு வெவ்வேறு உலோகங்களினால் செய்யப்பட்ட தகடுகளை எடுத்துத் தம் நாக்கின் மேற்பாகத்தில் ஒன்றும் கீழ்ப்பாகத்தில் மற்றொன்றும் படும்படி வைத்தார். இரண்டு தகடுகளின் நுனிகளை

யும் சேர்த்தார். மின்சாரசக்தி உண்டாயிற்று. இதன் காரணம், குறித்த தகடுகளின் நுனிகள் ஒன்று சேர்வதே என்றும், மனிதனது நாக்கு அம் மின்சார சக்தியைக் (ஒருபுறத்தினின்றும் இன்னொரு புறத்துக்) கடத்துகிறதென்றும் அவர் ஊகித்தார்.

பல சோதனைக்குப் பின், செம்பும் நாகமும் அதிக மின்சாரசக்தியை உண்டு பண்ணத் தக்கவை என்பது தெரியவந்தது. காலம் செல்லச் செல்லக் கண்டுபிடித்த விஷயங்களை அதிகமாக ஆராய்ச்சி செய்து விருத்தி செய்தனர். மின்சாரசக்தியை மிகுதியாக உண்டாக்கும் முறைகளை அனுபவ மூல மாயும் ஆராய்ச்சி மூலமாயும் பலர் கண்டறிந்தனர். இச்சக்தி எத்தன்மையானது என்பதை அறியவும் கூறவுமியலாது. ஆனால் இதன் குணத்தையும் தொழிலையும் சோதனைகள் மூலம் அறியலாம். அவ் வறிவின் உதவியால் இச்சக்தியை இன்று வாழ்க்கைக் குப் பயன்படுத்துகின்றோம். இந்த ஆச்சரியமான சக்தி எத்தனை வகையான தொழில்களைச் செய்து விடுகிறது! அதுவும், எவ்வளவு விரைவிலே செய்து விடுகிறது!

### மின்விளக்கு

'ஓடும் மின்சாரம்' செப்புக் கம்பியின் வழியாக எளிதாய் ஓடும்; கம்பியின் பருமன் அதிகரிக்க அதிகரிக்கத் தடையின்றி இது செல்லும். மிக நுண் ணிய செப்புக் கம்பியின் வழியாய்ச் செலுத்தினால், அது இச்சக்தியின் ஓட்டத்திற்கு இடையூறு விளை விக்கும். இச்சக்தி உரசிக்கொண்டே செல்வதனால் சிறு கம்பி சூடடைந்து ஒளிவிடும், அதிக சூடடை யினும் உருகாத உலோகம் ஒன்றினால் செய்த

சிறு கம்பியின் வழியாக மின்சக்தி செல்லும்வரை, அக்கம்பி வெண்ணிறத்தோடு பிரகாசித்துக் கொண்டே யிருக்கும். இதுதான் மின்சார விளக்கு ஒளி வீசுவதன் காரணம்.

தற்காலத்தில் பல இடங்களில் காணப்படும் குமிழ் விளக்குகளை முதன் முதலிற் கண்டு பிடித்தவர் அமெரிக்க நாட்டு எடிசன் என்னும் அறிஞர். ஏனைய விளக்குகளைவிட இவ்விளக்கினால் மிக்க நன்மையும் வசதியும் அமைகின்றன. இவ்விளக்குகளில் அழுக்கு ஏறுவதில்லை. இவை அபாயம் விளைவிப்பதுமில்லை; எரியும் அறையிலுள்ள வாயுவைப் பயன் படுத்தாமலும், அசுத்தப்படுத்தாமலும் ஒளி வீசுகின்றன. மேலும் இவை காற்றாலும் மழையாலும் அணைந்து போகா. ஓரிடத்திலிருந்தவாறே ஒரு விசையை அழுத்தினால் பல விளக்குகளை ஒருங்கே ஏற்றவும் அணைக்கவும் முடியும்.



'நீங்கள் கண்டுபிடித்ததில் முதன்மையாகக் கருதுவது எதை? எது உங்களுக்கு மிக்க இன்பத்தை ஊட்டியது?' என்று எடிசனைச் சிலர் கேட்டனர். அவர், 'முயலும்போது மிக்க இன்பத்தை எனக்களித்தது பேச்சு இயந்திரம்; என்றாலும், நான் முதன்மையாகக் கருதுவது மின்சார விளக்கே' என்றாராம்.

மின் அடுப்பு

ஒரு நீளமான மிக மெல்லிய செப்புக் கம்பியைச் சுருட்டி வளைத்து, ஓர் இரும்புப் பெட்டிக்குள் அமைத்து வைத்து, அதன் வழியாகப் பலமான மின் சார ஓட்டம் ஏற்படும்படி செய்தால், கம்பிச் சுருள் தகுந்த சூடு பெற்று அனலை வீசும். அப்பொழுது அதன்மேல், (அடுப்பைப் போல்,) பாத்திரங்களை வைத்துச் சமையல் செய்யலாம். இம்முறையைப் பின் பற்றியே மின்சார அடுப்பு அமைக்கப்பட்டிருக்கிறது. மின்சாரத்தின் உதவியால் போதுமான அளவிற்குச் சூடு உண்டாக்கலாமாதலால் கனத்த உலோகத் தகடு களையும், பெரிய இரும்பு உத்திரங்களையும், குழாய் களையும் ஒன்ருேடொன்று பொருத்துதல் போன்ற பல தொழில்களையும் மின்சார அடுப்பு, மின்சார உலை ஆகிய கருவிகளால் செய்து கொள்ளலாம்.

மின் முலாம்

மின்சார சக்தியால் பதார்த்தங்களை ஒன்று சேர்த்துப் பிறிதொரு பொருளாக்கலாம்; ஒரு பொருளை இரண்டு மூன்ருகப் பிரிக்கலாம். மின்சார சக்தியை நீருக்குள் செலுத்திஞல், அது நீரைப் பிரித்து அதனிடத்தில் அமைந்துள்ள இரண்டு ஆவிப் பொருள்களை நமக்குத் தருகிறது. இந்த ஆவிகளின் தன்மை, தொழில் முதலியவற்றை நிபுணர்கள் கண்டறிந்திருக்கின்றனர். தங்கம் அல்லது வெள்ளியைத் தக்க திரவங்களில் கரைத்து, அக் கரை நீரின் வழியாக மின்சாரம் ஓடும்படி செய்தால், தங்கமோ வெள்ளியோ அதனின்று கக்கப்படும். அவ்விடத்தில் அக்கரைசலில் அமிழும் படி வேறு உலோகத்தால் செய்யப்பட்ட சாமானைக்

கட்டித் தொங்கவிட்டால், அச்சாமான்மீது தங்க முலாம் அல்லது வெள்ளி முலாம் பூசப்படும்.

இன்னும் மின்சார சக்தியால் வெடி மருந்தைக் கொளுத்தி வெடிக்கும்படி செய்யலாம்; நரம்பு சம்பந்தமான நோய்களைக் குணப்படுத்தலாம்; மணிகளை அடிக்கலாம்; வண்டிகளை ஓட்டலாம்; தந்தி அடிக்கலாம், இவ்வாறு மின்சார சக்தியைப் பல வழிகளில் பயன்படுத்திக் கொள்ளலாம். தற்காலத்தில் மின்சார சக்தியின் சகாயத்தில் நடைபெறும் காரியங்கள் எண்ணிறந்தன.

1. சொல்லும் தொடரும் :

| | | |
|---|---|---|
| விஞ்ஞானி | ஆராய்ச்சி | அசுத்தம் |
| உலோகம் | குமிழ் விளக்கு | இடையூறு |
| அநுபவம | பிரகாசம் | தங்கமுலாம் |

2 சிந்தனைக்கு :

1. மின்சாரம் நமது வாழ்க்கையை எப்படி எளிதாக்குகிறது?

2. நமது நாட்டிலே எங்கெல்லாம் எப்படி மின்சாரத்தை உண்டாக்குகிறார்கள் என்பதை நீ அறிவாயா?

3. உன் வீட்டிலே மின்சார விளக்குகள் உண்டா? அதற்கு மின்சாரம் எங்கிருந்து கொண்டு வரப்படுகிறது?

3. பயிற்சி :

விளக்கு—விலக்கு
ஒளி —ஒலி—ஒழி
வழி —வளி—வலி

இந்தச் சொற்களின் பொருள் வேறுபாடுகளைக் கவனியுங்கள். இவை போன்ற சில: இதை ஞாபகத்திலே வைத்துக்கொள்ளுங்கள்.

| | |
|---|---|
| அளி —அழி | குளம்பு—குழம்பு |
| அளை —அழை | தளை —தழை |
| இளி —இழி | வாளை —வாழை |
| உளவு—உழவு | விளி —விழி |
| கிளி —கிழி | விளை —விழை |

சில சொற்கள, பவழம், பவளம்; மங்கலம், மங்களம்; லகர, ளகர, ழகர வேறுபாடின்றி எழுதப்படுகின்றன.

குமிழ் விளக்குகளிலே அழுக்கு ஏறுவதில்லை—ல, ள, ழ எழுத்துக்களைக் கவனி.

# 2. நூல் நிலையம்

'உலகம் நிலைபெறுவது செல்வப் பெருக்கினலன்று; அது மேன்மை வாய்ந்த எண்ணங்களாலும் நோக்கங்களாலுமே நிலைபெறுகின்றது. இப்பொன்னுரை தங்கமயமான பெரிய எழுத்துக்களால் பொறிக்கப்பட்டுள்ளது. எங்கே? அமெரிக்காக் கண்டத்தின் ஒரு பெரிய நூல் நிலையத்தின்மீது.

நூல் நிலையத்திலே

உயர்ந்த எண்ணங்களையும் நோக்கங்களையும் பொது மக்களுக்கு ஊட்டுவது புத்தகாலயம், அல்லது நூல் நிலையம். அறிவுத் தெய்வத்தின் கோயில் புத்தகாலயம். கவலைகளையும் துயரங்களையும் எளிதிலே மறக்கச் செய்வது நூலாராய்ச்சி அல்லவா? நல்ல நூல் நிலையத்தில் அருமையான நூல்களைக் காணலாம். அதனுதவியால் நாம் நமக்கு விளங்காத அரும் பதங்களையும் சொற்றொடர்களையும் எளிதிலே அறியலாம். எப்படி? அங்கே நிகண்டுகளும் அகராதிகளும், பொருளடக்கங்களும் இருக்கின்றன. மேலும் இங்கே விஞ்ஞானத்தை அறியலாம். இயற்கையின் அற்புதங்களையும் மனிதனின் அறிவுத் திறத்தினல் அமைந்த புதுமைகளையும் அறியலாம். சரித நூல்கள் இறந்தகால நிகழ்ச்சிகளை அப்படியே எடுத்துக் காட்டுகின்றன. காவியங்களும் நாடகங்களும் கதைக் கொத்துக்களும் நம் உணர்வை உருக்கி உள்ளத்திற்கு இன்பமளிக்கின்றன. இத்தகைய எண்ணிறந்த நூல்கள் இங்கே இருக்கின்றன.

செல்வமிகுந்த நாடுகளிலே நூல்நிலையங்களின் தோற்றம் எப்படியிருக்கிறது? விசாலமான அறை,

பளிங்குக் கற்களாலான சுவர்கள், சுகமாக அமர்ந்து படிக்க ஆசனங்கள், கண்குளிர ஒளிவீசும் அழகிய விளக்குகள், விசிறிகள்—இவை நூல்நிலையத்தை அழகுக் கோயில்களாகச் செய்கின்றன. சுவர்களைச் சுற்றிலும் உன்னதமான உயரிய அலமாரிகள், அலமாரிகளில் அழகாக ஒழுங்காக அடுக்கப்பட்ட புத்தகங்கள்—இவை அழகை மலரச் செய்கின்றன.

வாசகசாலை புத்தகாலயத்தில் ஓர் அமிசம். நாள், வாரம், மாதப் பத்திரிகைகளை அடுக்கடுக்காக அங்கே காணலாம். சங்கீத சிற்ப சாலைகளும் நூல்நிலையத்தின் முக்கிய அமிசங்களே. புத்தகாலயத்தில் கூடுவோர் பல நூல்களையும் தாமே பயின்று இன்புறுவதுபோல், கேள்வியாலும் மகிழும் வண்ணம் அங்கே சொற்பொழிவுகளும் இசையரங்குகளும் அவ்வப்போது நடைபெறும்: குத்து எழுத்துக்களால் எழுதிய புத்தகங்களைக் குருடர் கற்று அறிவுறுவர். அவர் அந்நூல்களை விரல்களால் தடவிப் படிப்பர்.

### சரஸ்வதி மகால்

அறிவைப் பரப்ப உதவும் புதிய சாதனங்களில் புத்தகாலயமும் ஒன்று. முன்காலத்தில் மிகுந்த சிரமத்துடன் கையால் எழுதப்பட்ட ஏடுகளைத் தேடித் தொகுத்துப் புத்தகாலயம் அமைத்தனர். அச்சு வித்தை கண்டுபிடிக்கப்பட்டபின் புத்தகங்கள் பெருகின. பண்டை நாளிலே கோவில்களைச் சார்ந்த கல்விச் சாலைகளில் ஏடுகள் தொகுக்கப்பட்டன. சமயத்துறவிகள் வசித்த மடங்களிலே மத சம்பந்தமான ஏடுகள் தொகுக்கப்பட்டன; சமயத் துறவிகளைப் போலவே அரசர்களும் நூல்நிலையங்களை அமைத்தனர். நம் நாட்டிலே பழைய நூல்நிலையங்

களில் மிகவும் பெரியது தஞ்சை மன்னருடைய நூல் நிலையம். இது 'சரஸ்வதி மகால்' எனப்படும். இங்கே பல அரிய ஏடுகளும் பழைய நூல்களும் கையெழுத்துப் பிரதிகளுமுண்டு. இந் நிலையத்தி லுள்ள நூல்களில் மிகப் பெரியது சிவ பாரதம்: இதில் சிவாஜியையும் அவர் முன்னோர் வரலாற்றையும் காணலாம் 'இப் புத்தகாலயம் அந்நாளில் உலகி லேயே மிகப் பெரியது; முக்கியமானது' என்று டாக்டர் பர்னல் கூறுகிறார்.

முந்நூறு ஆண்டுகளாகச் சேகரிக்கப்பட்ட புத் தகக் கூட்டமே 'சரஸ்வதி மகால்.' தஞ்சையை ஆண்ட ஆந்திர நாயக்க அரசர்களும் அதன் பின் ஆண்ட மகாராட்டிர மன்னர்களுமே இதைச் சேக ரித்தனர். இதிலே ஓலையிலும் காகிதத்திலும் எழுதப் பட்ட முப்பதினாயிரம் புத்தகப் பிரதிகள் காணப்படு கின்றன.

### பிரசார சங்கம்

மக்களின் மடமை இருளைப் போக்கக் கிராமங் களிலும் நகரங்களிலும் புத்தகாலயங்கள் நிறுவ நமது சர்க்கார் முயன்று வருகிறது; இது நல்ல முயற்சியே. கோயில், பள்ளிக்கூடம் போன்று, நூல் நிலையமும் நமக்கு இன்றியமையாத ஒன்றே. சரியான முறை யில் நூல் நிலையத்தைப் பயன்படுத்திக் கொள்ளும் மக்களிடம் நாட்டுப்பற்று, நாகரிகம், ஒற்றுமை யுணர்ச்சி, முன்னேற்றத்தில் விருப்பம், சீர்திருத்த இயக்கங்களில் வெறுப்பற்ற தன்மை முதலியவை ஏற்படும். அதனால் அவர்கள் கிணற்றுத் தவளையைப் போல் இராமல் உலக விஷயங்களை அறிந்து வாழ்க் கையை வளம் பெற நடத்துவார்கள். புத்தகாலயங்

களால் ஏற்படும் நன்மையை எல்லோருக்கும் எடுத்துக் கூறச், சென்னையிலே நூல் நிலையப் பிரசார சங்கம் ஒன்று நிறுவப்பட்டிருக்கிறது.

**கல்வியும் அறிவும்**

மக்களுக்குக் கண்போன்றது கல்வி; கல்வியின் எல்லையும் பரப்பும் வரவரப் பெருகி வருகின்றது. வருடந்தோறும் பல்லாயிரக் கணக்கான நூல்கள் வெளிவருகின்றன. இவை பலதிறத்தன; பல துறையன. பழங்காலந்தொட்டு நாளிதுவரையுள்ள ஆயிரம் ஆயிரம் அறிஞர்கள் பற்பல மொழிகளில் எழுதி வைத்துள்ள கருத்துக்கள், கற்பனைகள், சிந்தனைகளை நூல்கள் நமக்கு உதவுகின்றன,

அறிவினால் ஆராய்ந்து கற்றற்குரிய பொருள்கள் அளவின்றிப் பரந்து கிடக்கின்றன. நூல்கள் மலிந்து பெருகிக் கிடக்கின்றன.

கல்வி கரையில; கற்பவர் நாள்சில;
மெல்ல நினைக்கில் பிணிபல;—தெள்ளிதின்
ஆராய்ந்து, அமைவுடைய கற்பவே, நீர்ஒழியப்
பால் உண் குருகின் தெளிந்து.

நமது நாட்டு மக்களை, அறியாமை இருள்போலச் சூழ்ந்திருக்கிறது. எழுதப்படிக்கத் தெரியாத நிரட்சர குட்சிகள் நூற்றுக்குத் தொண்ணூற்றேழு என்று கணக்கிடப்படுகிறது. ஆழ்ந்து அகன்ற இவ்வறியாமையைப் போக்க அறிஞரும் அரசாங்கத்தினரும் ஒன்றுகூடி முயல்வது அவசியம். இம் முயற்சியில் முக்கியமாய் நாம் மேற்கொள்ள வேண்டியது, நூல் நிலையங்களை அங்கங்கே நிறுவுவதேயாம், அறிவு பெருகி வளர்தற்கு அதனினும் சிறந்த கருவி இல்லை.

1. சொல்லும் தொடரும் :

| | | |
|---|---|---|
| பொன்னுரை | நிரட்சரகுட்சி | கிணற்றுத்தவளை |
| நூலாராய்ச்சி | அறிவுத்திறன் | சமயத்துறவி |

2. சிந்தனைக்கு :

1. உங்கள் ஊரிலே நூல் நிலையம் இருக்கின்றதா ?

2. பத்திரிகை படிக்கும் பழக்கம் உண்டா ? மாதசஞ்சிகை களிலே நீங்கள் விரும்புவது எது ? எதனால் ?

3. நவீனம், நாடகம், சிறுகதை—உங்களுக்குப் பிடிப்பது எது ?

3. பயிற்சி : திருத்தி எழுது :

| | | |
|---|---|---|
| ஏனையத்தேசம் | ஆனஉடன் | புத்தகங்கள் கிடையாது |
| நான்ங்கு | சிறிதுநாள் | குளம்கட்டினான் |
| மக்கள்கள | ஒவ்வொருபையன்களும் | |

4. இலக்கணம் :

வினைச்சொற்களைப் பற்றி :—1

1. இவை அழகை மலரச் செய்கின்றன.

2. நிரட்சரகுட்சிகள் நூற்றுக்குத் தொண்ணூற்றேழு என்று கணக்கிடப்படுகிறது—வினைச்சொற்கள் எவை ?

வினைச்சொல் என்றால் என்ன? வினையை அதாவது, தொழிலைக் குறிப்பதல்லவா வினைச்சொல். இராமன் வந்தான் ; அவன் வீட்டைக் கட்டினான். இங்கே இராமனுடைய வருதல், கட்டுதல் தொழில்களை வந்தான், கட்டினான் என்பன குறித்தல் காண்க. வந்தான் என்பதற்குச் செயப்படுபொருள் இல்லை. கட்டினான் என்பதற்குச் செயப்படு பொருள் உண்டு ; மண்ணால், கல்லால் வீட்டைக் கட்டினான்.

இந்தப் பாடத்திலே பயிலும் (செயப்படுபொருள் உள்ள, இல்லாத) வினைகளை எடுத்தெழுது.

# மைசூர் ஐதர் அலி

## அதிசய வீரன்

ஒரு சாமானியப் போர்ச் சேவகன்; சொற்பக் கூலிக்காக உயிரை விற்பவன்; உயர்குடிப் பிறப்போ செல்வமோ செல்வாக்கோ எதுவும் இல்லாதவன்; எழுதப் படிக்கத் தெரியாத தற்குறி; இப்படிப்பட்ட ஒருவன், தன் அறிவாற்றல்களாலும் சாதுரியம் தைரியங்களாலும், பூமி எங்கும் போர் முழக்கம் மிஞ்சித் தீர சூரர்கள் மலிந்து திகழ்ந்த நாளிலே (தன் பெயர் கேட்போர் பீதியுற்று நடுநடுங்கும்) வீர சிகாமணியாய் விளங்கிப் பெரிய ராச்சியத்துக்கும் அதிபதியானுன் என்ருல், சரித்திரத்திலேயே அது அற்புதம் அல்லவா? ஐதர் அலி இத்தகைய அதிசய வீரருள் ஒருவன் என்கிருர், அவரைப்பற்றி எழுதிய அறிஞர் மாதவையர்.

தங்கக் கனி மலிந்த கோலாரிலே வந்து குடி ஏறிய அலி முகமதுவின் பேரன் ஐதர் அலி. ஐதருடைய தந்தை 'பட்டி முகம்மது', மைசூர் ராச்சியத்திலே உத்தியோகம் செய்து வந்தார். ஐதருக்கு ஷபாஸ் என்ற தமையன் ஒருவன் உண்டு. அவன் ஆயிரம் சேவகர்க்குத் தலைவனுய் இராணுவத்திலே சேவை செய்து வத்தான். ஐதர், அவன் கீழ் ஒரு விதச் சேவகனுய் வேலை பார்த்தான். ஐதர் பிறந்த வருடம் நிச்சயிக்கப்படவில்லை கி. பி. 1717-ல், அல்லது அதை ஒட்டி அவன் பிறந்திருக்கக்கூடும் என்று கருதப்படுகிறது.

ஐதர் அலியின் போர் விருப்பமும் வீரமும் அவனைப் படிப்படியாக உயர்பதவிக்கு உயர்த்தின.

அவனுடைய உத்தியோக வரலாறு, அவன் புரிந்த போர்கள். அவன் மைசூர் அரசரைக் கைப்பற்றிய விதம், இவற்றை விவரிப்பது சரித்திர நிபுணர் கடன். இங்கே நாம் அவனுடைய குண நலன்களிலே, வாழ்க்கைச் சம்பவங்களிலே சிற்சில குறிப்புக்களை மட்டும் கூறுகின்றோம்.

**சம்பவங்கள் சில**

ஐதருக்குக் கண்டே ராவ் என்ற பிராமணன் மந்திரியாக இருந்தான். ஐதரே மைசூர் ராச்சியத்தின் அதிபதி; என்றாலும், அரசுரிமையை அவன் ஏற்காது, பழைய அரசமரபிலே ஓரிளங் குமரனை மன்னவனாகப் பாவித்தான்; அதன்படி நடந்தும் வந்தான். தன் மகன் 'பொம்மையரச'னாக விளங்குவதைக் கண்டு, மனம் பொறாத இராணி, கண்டே ராவை வசப்படுத்தி, அதிகாரத்தைக் கைப்பற்ற எத்தனித்தாள். கண்டே ராவின் சூழ்ச்சியாலும் துரோகத்தாலும் ஐதராட்சிக்கு ஆபத்தேற்பட்டது. கண்டே ராவை ஐதர் சிறை பிடித்தான்; அப்போது இராணி, அவன் பிராமண குலத்தினன் ஆனபடியால் அவனைக் கொல்லவேண்டாம் என்று வேண்டிக் கொண்டாள். ஐதரும் கிளிப்பிள்ளை போல அவனைப் பேணி வளர்ப்பதாகக் கூறினானும். அவ்வாறே, கண்டேராவ் சாகும்வரை அவனைக் கம்பிகளாலான கூட்டிலே அடைத்துவைத்து நாள்தோறும் போதுமான பாலும் சோறும் கொடுத்து வந்தானும்.

1776-ல் அந்தப் பொம்மை ராஜா இறந்து போனான். அவனுக்குப் பதில் ஒருவனை அரசனாகத் தெரிந்தெடுக்க ஐதர் ஒரு வழி செய்தான். அரண்மனையிலே ஓரறையில் பலவகை விளையாட்டுச்

சாமான்களைச் சேகரித்தான். அரசுக்குரிய இந்து ராச குடும்பத்தைச் சேர்ந்த குழந்தைகளை அங்கே கொண்டுவந்து, அதனதன் விருப்பம்போல சாமான்களை எடுக்கும்படி சொன்னான். எலுமிச்சம் பழத்தையும் கட்டாரிக் கத்தியையும் தனக்குப் பிடித்தனவாக எடுத்துவந்த சிறுவனையே ஐதர், மைசூர் அரசனாக முடிசூட்டினான்.

குற்றம் செய்தவர்களைத் தூணிலே கட்டிக் குறடாவாலே அடிப்பது அக்கால வழக்கம். ஒரு போரிலே, தான் செய்யவேண்டிய ஒன்றை, ஐதர், தன் அருமை மகன் திப்புவின் பொறுப்பிலே விட்டிருந்தான். அதைச் செய்யும் கடமை பூண்டிருந்த திப்பு, கவனக்குறைவால் அதைச் செய்யத் தவறினான். இதைத்தெரிந்தபோது ஐதர் திப்புவைத் தன் மகன் என்றும் பாராது குறடாவால் அடித்துத் தண்டித்தான்.

மந்திரியின் விசுவாசம்

இந்துவாயினும் முஸ்லிமாயினும், ஐதர் பாரபட்சம் பாராட்டியதில்லை. குறுகிய நோக்கம் அவனிடம் அணுவேனுமில்லை. அவனிடத்திலே அவனுடைய உத்தியோகஸ்தர்கள் கொண்டிருந்த அன்புக்கும் வாஞ்சனைக்கும் அளவில்லை. அவனுடைய மந்திரி பூர்ணையா. இவர் ஒரு பிராமணர். ஐதர் திடீரென்று இறந்துபோனான். அவன் மகன் திப்பு நெடுந்தொலைவிலே இராணுவசோலியாகப்போயிருந்தான். ஐதர் இறந்தபோது பிராமண மந்திரியான பூர்ணையா இந்து வேந்தனையே மீண்டும் மைசூர் மன்னனாக முடிசூட்ட முயன்றிருக்கலாம். அப்படி

அவர் செய்யவில்லை. ஐதர் இறந்தமை வெளிக்குத் தெரிந்தால் கலகம் நேரிடும் என்று, சவத்தைப் பெட்டியில் அடக்கிப் பொக்கிஷம் என்று, சீரங்கப்பட்டணத்துக்கு அனுப்பினர். ஐதர் நோய்வாய்ப் பட்டிருப்பதாகவே செய்தியைப் பரப்பினர். திப்பு திரும்பி வந்து ராச்சியத்தை ஒப்புக் கொள்ளும் வரை, அவன் உரிமையைப் பதனமாய்ப் பாதுகாத்தார். திப்புவும் பூர்ணையாவையே தன் மதி மந்திரியாகக் கொண்டதில் வியப்பில்லை.

குண நலம்

ஐதர் நியாயப்பற்றும் பெருந்தன்மையும் உடையவன்; பரந்த நோக்கமும் பண்பாடும் உள்ளவன்; கடமையிலே கண்டிப்புள்ளவன். அவனுடைய அறிவாற்றல்களைப் பழி தூற்றும் விரோதிகளே ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். போர்த் திறமையிலே அவனுக்குச் சமானமான வீரன் அக்காலத்தில் இந்தியாவிலே வேறெவரும் இல்லை. குதிரை ஏற்றத்தில் தேர்ந்தவன்; வாட் போரிலும் துப்பாக்கி சுடுவதிலும் சமர்த்தன். ஐரோப்பியரது யுத்த முறைகளைப் பாராட்டிப் பயின்றான். சந்தர்ப்பவாதி; சமயத்துக்குத்தக நடக்கும் மதியூகம் உள்ளவன். அக்காலம் இந்திய அரசர்களிலே அவன் ஒருவன்தான், தன் நாட்டைச் சார்ந்த கடற்கரைப் பாதுகாப்புக்கென்று, கப்பல் படையை அமர்த்திப் பராமரித்து வந்தவன்; நிருவாகத்திலே நேர்மையையும் நியாயத்தையும் கடைப்பிடித்தவன். உண்மை கண்டு இவனை மதிப்பிடுவோர், தென்னிந்திய வீரருள் மிகச் சிறந்த ஒருவனாகவே இவனைக் கருதுவர்.

1. சொல்லும் தொடரும் :

| | | | |
|---|---|---|---|
| அறிவாற்றல் | பாரபட்சம் | மதியூகம் | சாதுரியம் |
| பதனம் | பராமரிப்பு | தீரசூரர் | பரந்தநோக்கு |
| மதி மந்திரி | வீரசிகாமணி | வாட்போர் | சந்தர்ப்பவாதி |

2. சிந்தனைக்கு :

1. ஐதரலி அதிசய வீரருள் ஒருவன் என்பது எதனால் ?

2. ஐதரலியுடன் ஆங்கிலர் புரிந்த போராட்டங்களை அறிவாயா ?

3. இந்துவாகிய பூர்ணையா முஸலிமாகிய ஐதரலியிடம் மந்திரியாக இருந்தாரே—இந்து முஸ்லிம் ஒற்றுமைக்கு அது எப்படி உதாரணமாகும் ?

4. இந்திய இராணுவத்தின் இன்றைய தளபதி யார் ?

3. பயிற்சி :

சமஸ்கிருதச் சொற்களைத் தமிழிலே எழுதும்போது எச்சரிக்கையாய் எழுதவேண்டும்; இல்லாவிட்டால் எழுத்துப் பிழை நேரும்; சாதுர்யம—தைர்யம்; தரேகம—இவை தவறு.

| | |
|---|---|
| ராமன் — இராமன் | கர்த்தா — கருத்தா |
| லாபம் — இலாபம் | பக்வம் — பக்குவம் |
| பத்மம் — பதுமம் | புண்யம் — புண்ணியம் |

—இவற்றைக் கவனியுங்கள்.

திருத்தி எழுது :

| | | | |
|---|---|---|---|
| காவ்யம் | லோபி | பக்ஷணம | ஸ்வாமி |
| வம்சம் | அர்த்தம் | தர்மம் | சக்தி |
| ரத்னம் | பிக்ஷா | ஸ்வதேசி | பக்தி |
| ஸ்திதி | சப்தம் | ஸபா | சஷ்டி |

4. இலக்கணம் : வினைச்சொல்—2.

கண்டேராவைக் கூட்டிலே அடைத்துவைத்து, ஐதர், பாலும் சோறும் கொடுத்து வந்தான்—இதிலே அடைத்து வைத்துக் கொடுத்துவநதான என்பன வினைச சொற்கள். வினைச் சொற்கள் தொழிலைக் குறிப்பன அல்லவா ?

இதிலே வந்தான் என்பது வினைமுற்று.

முறறு - முடிவு. தொழில் முடிந்ததை அறிவிப்பது வினை முற்று.

வந்தேன், வந்தாய், வந்தான்—என்று இடவகையால் மூன்று,

வந்தான், வருகிறான், வருவான்—என்று காலவகையால் மூன்று,

வந்தான், வந்தார்; வந்தது, வந்தன என்று எண் வகையால் வினைமுற்று இரண்டு வகைப்படும்.

செய, நட. போ என்ற பகுதியின் அடியாக, இடம், காலம் எண் வகைகளிலே விரிவடையும் வினைமுற்றுக்களை எழுது.

9. நாடகம்

# வைர அட்டிகை

இடம்:—மதுரையில் ஒரு வீடு.

காலம்:—மாலை நேரம்.

பாத்திரங்கள் :—கோபாலனும் அவனுடைய மனைவி மீனாட்சியும்.

## காட்சி 1

கோபாலன் :—(கையில் ஒரு கடிதத்துடன் வீட்டிற்குள் வருகிறான்.) மீனாட்சி இதோ உன் அதிட்டத்தைப் பார்.

மீனாட்சி:—அப்படி என்ன அதிட்டம் வந்து விட்டது, திடீரென்று!

கோபாலன்:—இந்தக் கடிதத்தைப் படித்துப் பார், தெரியும். (கடிதத்தைக் கொடுக்கிறான்)

மீனாட்சி :—(உறையைப் பிரித்துக் கடிதத்தைப் பின்வருமாறு படிக்கிறாள்.)

ஸ்ரீ வெங்கடேசன் கிருபையை முன்னிட்டு,

என் குழந்தை சௌபாக்கியவதி பங்கஜத்தைச் சிரஞ்சீவி சீனிவாசனுக்கு விவாகஞ் செய்ய நிச்சயித்து, முகூர்த்தம் நிகழும் தை மாதம் பதினோராம் தேதி பெண் கிருகத்தில் நடக்கிறபடியால், அன்றை முகூர்த்தத்துக்கும் பாட்டுக் கச்சேரி முதலான சகல வைபவங்களுக்கும் தாங்கள் குடும்ப சகிதம் வந்திருந்து, தம்பதிகளை ஆசீர்வதிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

ராமச்சந்திர ராவ்,
கலெக்டர்.

ஆ-மா-ம், கலெக்டர் பெண்ணுக்குக் கலியாணம் என்றால் எனக்கு என்ன அதிட்டம்! (கடிதத்தை மேசைமேல் எறிந்து பெருமூச்சு விடுகிருள.)

**கோபாலன்**:—மீனு! நீ சந்தோஷமடைவாய் என்றல்லவோ நினைத்தேன்! அழைப்புக் கடிதங்களெல்லாம் நம்மைப் போன்ற குமாஸ்தாக்களுக்கு அனுப்புவதில்லை. நான் சமாபந்தியில் கலெக்டர் துரையவர்கள் மனங்கோணுமல் நடந்தபடியாலேயே எனக்கு இது கிடைத்திருக்கிறது. நீ அதிகமாக வெளியே போவதில்லையே! இந்தக் கலியாணத்திற்கு நீ போனல் அங்கே எவ்வளவோ பெரிய சீமாட்டிகளோடு உனக்குப் பழக்கமேற்படுமே?

மீனுட்சி:—ஆம்! ஆம்! எனக்கு நல்ல புடவைதான் இருக்கிறதா!

**கோபாலன்**:—ஏன்? திருவிழாக்களுக்கு உடுத்திச் செல்வாயே, அந்த வங்கிச் சேலையை உடுத்திக் கொள்ளக் கூடாதா? அஃது உன் பொன்னிற மேனிக்குப் பொருத்தமாயிருக்கிறதே! எனக்குத் தெரிந்தவரை........

மீனுட்சி:—(விம்மி விம்மி அழுதுகொண்டே) நான் போகப் போகிறதில்லை. அம்மாதிரி விசேஷங்களுக்குக் கட்டிக்கொள்ளும் சிறந்த ஆடை எனக்கில்லையே! வேண்டுமானல் உங்கள் தங்கையை அழைத்துக் கொண்டு நீங்கள் மட்டும் போய்வாருங்கள்.

**கோபாலன்**:—அன்பே! அழாதே! நீ ஆசைப் படுகிற புடவை என்ன விலை? நமது கையிருப்பிலிருந்து அதை வாங்கிக் கொள்வோம். இன்னும் இதுபோன்ற விசேடங்களிலெல்லாம் அது உபயோகப்படுமே!

மீனாட்சி :—எனக்குத் திட்டமாகத் தெரியாது. சுமார் ஐம்பது ரூபாய் இருந்தால் மேகவர்ணச் சேலை யொன்று வாங்கலாமென்று நினைக்கிறேன்.

கோபாலன் :—நல்லது ! ஐம்பது ரூபாய் தருகிறேன். புடவை மட்டும் வெகு அழகாக இருக்கட்டும்.

## காட்சி 2

இடம் :—மதுரையில் கோபாலனுடைய வீடு.
காலம் :—காலை வேளை.
பாத்திரங்கள் :—கோபாலனும் மீனாட்சியும்.

மீனாட்சி :—(முணுமுணுத்துக் கொண்டே காப்பி கொண்டு வந்து கோபாலனிடம் கொடுக்கிறாள்.) இந்தாங்கோ, காப்பியைக் குடித்துவிட்டு உங்கள் ஆபீசு வேலையைப் பார்த்துக்கொண்டே இருங்கோ. கலியாணத்திற்குப் புறப்படச் சொன்னேமே; இன்னும் மூன்று நாள்தானே இருக்கிறது; அதற்கு என்ன வேண்டும் என்று யார் கவனிக்கிறது.

கோபாலன் :—புடவைதான் வாங்கியாய் விட்டதே இன்னும் ஏன் கவலை?

மீனாட்சி :—எனக்குப் போட்டுக்கொள்ள என்ன நகை இருக்கிறது? நகையும் நட்டுமா வருகிறவர்களுக்கு மத்தியில் மூளிபோல எப்படி நிற்பது.

கோபாலன் :—புஷ்பத்தை நிறைய வாங்கிச் சூட்டிக்கொள் ; நகைக்கு அவ்வளவு அழகு வருமா ? இரண்டொரு அணுவுக்கு மணங்கொண்ட மட்டும் பூ வாங்கலாமே !

மீனாட்சி :—அது என்னால் முடியாது. எவ்வளவோ சீமாட்டிகளுக்கு மத்தியில் என் வறுமையை விளம்பரஞ் செய்யவோ ? கூடவே கூடாது.

**கோபாலன்.**—நல்லது! இன்னும் வீண் முரண்டு செய்யாதே. பண்ணை சேஷய்யர் மனைவி தனலட்சுமியைக் கேட்டு ஏதாவது நகை இரவல் வாங்கிக்கொள்.

**மீனாட்சி:**—ஆம்! வாஸ்தவந்தான். எனக்கு ஞாபக மில்லையே?

[மீனாட்சி தனலட்சுமியிடம் ஒரு வைர அட்டிகையை இரவல் வாங்கிக் கொள்கிறாள். கலெக்டர் பெண் கலியாணத்திற்குச் செல்கிறாள். அங்கு வந்திருக்கும் சீமாட்டிகளுடன் பழகு கிறாள். இரவில் மற்றப் பெண்களுடன் பாடிக் களிக்கிறாள். விடிய இரண்டு நாழிகை இருக்கும் பொழுது தன் கணவனுடன் வீட்டுக்குத் திரும்புகிறாள்.]

## காட்சி 3

**இடம்:**—கோபாலனுடைய வீடு.
**காலம்:**—அதிகாலை.
**பாத்திரங்கள்:**—கோபாலனும் அவனுடைய மனைவியும்.

**மீனாட்சி:**—(தனது அழகைக் கண்ணாடியில் பார்க்கிறாள். திடுக்கிட்டுக் கூச்சலிடுகிறாள்.) ஆ! ஆ! வைர அட்டிகை தவறிவிட்டது! (புருஷனை நோக்கி) நான்.... நான்.... நான்—தனலட்சுமியின் வைர அட்டிகையைத் தொலைத்து விட்டேன்!

**கோபாலன்:**—ஆ, அப்படியா! கலெக்டர் வீட்டிலிருந்து திரும்பும்பொழுது அது உன் கழுத்தில் கிடந்ததா?

**மீனாட்சி:**—ஆம்! தொட்டுக்கூடப் பார்த்தேன்.

**கோபாலன்:**—ஆனால் வண்டியில் கிடக்கலாம். தெருவில் விழுந்திருந்தால் ஓசை கேட்டிராதா? வண்டிக்காரன் பெயர் ஞாபகமிருக்கிறதா?

**மீனாட்சி:**—இல்லையே?

கோபாலன் :—வந்த வழியெல்லாம் நடந்துபோய்ப் பார்க்கிறேன். ஒருவேளை கீழே கிடந்தகப்படாதா?

(வெளியே செல்கிருன்)

[வைர அட்டிகை அகப்படவில்லை. கெட்டுப்போன அட்டிகை போன்ற ஓர் அட்டிகையை இரண்டாயிரம் ரூபாய்க்கு விலைக்கு வாங்குகிருர்கள். அதைத் தனலட்சுமியிடம் திரும்பக்கொடுக்கிருர்கள். பின்னர் கடனையிறுக்கச் சிக்கனவாழக்கை நடத்தி வருகிருர்கள்.]

## காட்சி 4

இடம் .—குளக்கரை.
காலம் :—மாலை வேளை.
பாத்திரங்கள் :—மீனுட்சி, தனலட்சுமியும் அவளுடைய குழந்தையும்.

மீனுட்சி :—(தனக்குள்) அதோ உலாவிக்கொண்டிருப்பவள் நமது தோழி தனலட்சுமி அல்லவோ? அவளைக் கண்டு பேசலாமா? ஏன். கூடாது? இப்பொழுதுதான் கடனெல்லாம் தீர்ந்து விட்டதே? இனி அவளிடம் உள்ளதைச் சொன்னுல் என்ன? (அருகே சென்று) தனம்! சௌக்கியமா?

தனலட்சுமி :—(திகைக்கிருள்.) அம்மா !............தெரியாது. நானில்லை............நீங்கள் நினைப்பது தவறு.

மீனுட்சி :—நான் மீனுட்சி அல்லவா?

தனலட்சுமி :—(பிரமித்து) ஆ! மீனு! என்ன இவ்வளவு கேவலமாய் மாறிவிட்டாய்?

மீனுட்சி :—ஆம்...உன்னைக் கடைசியாய்ப் பார்த்தது முதல் துர்ப்பாக்கியம் என்னைத் தொடர்ந்து வந்தது. தரித்திரமும்............!

தனலட்சுமி:—ஆ!....................எப்படி? விரிவாகச் சொல்.

மீனாட்சி:—கலெக்டர் வீட்டுக் கலியாணத்துக்கு எனக்கு நீ இரவல் கொடுத்த வைர அட்டிகை ஞாபகம் வருகிறதா? அது தவறி விட்டது.

தனலட்சுமி:—இல்லவே இல்லை! நீ என்னிடம் திருப்பிக் கொடுத்துவிட்டாயே? உனக்கு ஞாபகம் இல்லையா!

மீனாட்சி:—நான் கொடுத்தது நகல்; அசல் அன்று. சென்ற பத்து வருடங்களாக அந்தக் கடனைத் தான் அடைத்தோம்........இலேசான காரியமா? எங்கள் எளிமையை யோசித்துப்பார். ஆனால் நல்லவேளை தீர்ந்துவிட்டது.

தனலட்சுமி:—(மீனாட்சியின்மேல் வைத்த கண் வாங்காமல் திகைத்து நிற்கிறாள்.) நீ என்ன சொல்கிறாய்? என் அட்டிகைக்குப் பதில் வாங்கித் தந்ததாகவா?

மீனாட்சி:—ஆம்! ஆம்! உனக்கு வித்தியாசம் தெரிய வந்ததா!

தனலட்சுமி:—(மீனாட்சியின் கையிரண்டையும் இறுகப் பிடித்துக்கொண்டு) ஐயோ! அநியாயமே என்னுடைய அட்டிகை சீமைக் கமலம்தானே! இருபது ரூபாய்க்குத்தானே வாங்கினேன்!

மீனாட்சி:—என்னமோ, அம்மா, இரவல் நகை போட்டுக் கொண்டு ஒரு நாள் பகட்டினதற்குப் பத்து வருஷம் கஷ்டம். பெண்கள் நகை அணிய ஆசை கொள்ளுதல் வீண் பைத்தியம். அதிலும் இரவல் கூடவே கூடாது.

1. சொல்லும் தொடரும் :

| | | |
|---|---|---|
| சௌபாக்கியவதி | சமாபந்தி | சிக்கன வாழ்வு |
| முகூர்த்தம் | அட்டிகை | தம்பதிகள் |

2. சிந்தனைக்கு :

1. கோபாலன் அவன் மனைவி மீனாட்சி : இவர்களின் குணாதிசயங்களைக் கூறு.

2. உன் தங்கைக்குக் கலியாணம் ; திருமண அழைப்பிதழ் எழுது.

3. நமது பெண்களுடைய நகைப்பித்தை நீங்கள் அறிவீர்களா ?

4. தீபாவளிக்கு 'ஜவுளி' வாங்குவது, என்பதை வைத்து உன் அப்பா, அம்மா, தங்கைகளைப் பாத்திரமாகக் கொண்டு ஒரு காட்சி தயாரிக்க உங்களால் முடியுமா ?

3. பயிற்சி :

தற்கூற்று, அயற்கூற்று.

1. அவன் 'நான் வருவேன்' என்றான் : தற்கூற்று—தன்மையிடத்துக்கேற்ப ஒருவன் கூறியபடி கூறுவது.

2. அவன் தான் வருவதாகச் சொன்னான் : அயற்கூற்று—படர்க்கையிடத்துக்கேற்பப் பொருளை மாற்றாது கூறுவது.

முதல் காட்சியையும் மூன்றாங் காட்சியையும் அயற்கூற்றிலே எழுது.

4. இலக்கணம் : எச்சவினை.

வினை முற்றுக்களை அறிந்தோம் ; எச்சம், வினையெச்சம் பெயரெச்சம் என்று இரண்டு வகைப்படும் என்பதை அறிவீர்கள். வினைச்சொல்லைக் கொண்டு முடிவது வினையெச்சம் ; பெயரைக் கொண்டு முடியும் எச்சச் சொல் பெயரெச்சம் அல்லவா ?

இந்தப் பாடத்தின் முதற் காட்சியிலே அமைந்துள்ள பெயரெச்சம் வினையெசசங்களைத் தொகுத்தெழுது.

எச்சங்களை முடித்தெழுது.

1. பசு ஓடி ——
2. நேற்று நிகழ்ந்த ——
3. நான் நடந்து ——
4. வயலிலே உழுத ——
5. நான் வீட்டுக்குப் போய் ——

# குறிப்புரை

## குறள்

1. கடவுளதுண்மை கூறப்படுகிறது; எழுத்துக்கள் எல்லாம் அகரமாகிய முதலை உடையன; அதுபோல, உலகம் ஆதிபகவானாகிய முதலை உடையது: எடுத்துக் காட்டுவமை.

2. பயன் யாது? இல்லை என்றபடி. வால் அறிவன் - மெய் யறிவினை உடையான் - கடவுள். நற்றாள் - நல்லதாள் — பிறவிப் பிணிக்கு மருந்து.

3. அரிய - இயமம் நியமம் முதலிய யோகங்கள்; எளிய- வெஃகல், வெகுளல் முதலியன.

4. உயிர்கள் மாட்டு அருளுடையர். செந்தண்மை - செவ் விய தண்ணளி, அந்தணர் - அழகி யதட்பம் (தண்ணளி-அருள்) உடையோர்.

5. ஒல்லும் வகை – இயலுந்திறம் - பொருள் அளவு உடல் நிலைகளுக்கேற்ப, ஓவாமை - இடைவிடாமை.

6. ஆதல் - ஆகுக; பிற ஆகுல நீர - மனமாசு ஒழிந்த பிற சொல்லும் வேடமும் அறம் எனப்படா: ஆரவார நீர்மைய.

7. நிரல் நிரை - அன்புடைமை பண்பு; அறனுண்டமை பயன்.

8. வையகத்தான் எனினும், வானிலே உள்ள தேவருள் ஒருவனாக நன்கு மதிக்கப்படுவான்.

9. கற்புநலங் கூறப்பட்டது. கற்பு என்னும் கலங்கா நிலை. ஒருவன் எய்தும் பொருள்களிலே இல்லாளின் மேம்பட்டது இல்லை.

10. சிறையாற் காக்கும் காவல்.. நிறைக்காவல் இல்லாத போது, சிறைக்காவலால் பயன் இல்லை. நிறை - நெஞ்சைக் கற்புநெறியிலே நிறுத்தல்.

11. பொருளுடையன் ஆக்குதல் நன்மையாகா; கல்வி யுடையன் ஆக்குக. தந்தை கடன் கூறப்பட்டது.

12. புதல்வர் கடன் கூறப்பட்டது.

13. சிபிச் சக்கரவர்த்தி.

14. வறண்ட பாலையிலே வற்றல் மரந் தளிர்த்தாற் போலும்.

15. பிற அணிகள் அணி ஆகா.

16. கனி—ஔவை உண்ட நெல்லிக்கனி போல அமிழ்தான வற்றை ; காய் - காஞ்சிரங்காய் போல நஞ்சானவற்றை.

17. நன்றல்லது - தீமை.

18. பஞ்சமா பாதகங்களைச் செய்தார்க்கும், பாவத்தின் நீங்கும் வாயில் (வழி) உண்டு. ஒருவன் செய்த நன்றியைச் சிதைத்த மகனுக்கு அஃதில்லை. செய்ந்நன்றி கோறலின் கொடுமை கூறப்பட்டது.

19. சொற் குற்றத்தால் தாமே துன்புறுவர்.

20. புண் ஆறிப்போகும்; வடு ஆருது கிடக்கும். தீயும் கொடுஞ்சொல்லும் சுடும்; ஆருமையால் தீயினும் கொடுஞ்சொல் தீயது. வேற்றுமை அணி. மொழியடக்கம் கூறப்பட்டது.

21. விருப்பம் - சிறப்பு. உயிர் சிறந்தது எனினும் ஒழுக்கம் போல அது விழுப்பம் தராது.

22. ஒழுகலைக் கல்லார் அறிவிலாதார். ஒட்ட ஒழுகல் - உயர்ந்தோர் பலரும் ஒழுகியவாற்ருன் ஒழுகுதல். கல்விக்குப் பயன் அறிவு ; அறிவுக்குப் பயன் ஒழுக்கம்.

23. தன்னை அகழ்வாரை வீழாமல் தாங்கும் நிலம் போல.

24. மனச் செருக்கால் தீயவற்றைச் செய்தாரைப், பொறுமையால் வென்றுவிடுக.

25. அழுக்காறு இல்லாத இயல்பினை ஒழுக்க நெறியாகக் கொள்க; ஒழுக்க நெறிபோல உயிரினும் ஓம்புக.

26. புறங்கூறல் - காணுதவழி இகழ்ந்துரைத்துக் கண்டவழி புகழ்ந்துரைத்தல்.

27. மகன் என்று சொல்லற்க; பதர் என்று சொல்லுக.

28. தீயவினைகள் துன்பமே பயத்தலான், தீயினும் மிகுதி யாக அவை அஞ்சப்படும்.

29. அக்கேடு, தன்னை விற்ருயினும் கொள்ளும் தகுதியை உடைத்து.

30. ஈயாது வைத்துப்பின் இழந்துபோம் அருளிலாதார் : அறிந்தாராஞல், தாமும் அவ்வின்பத்தை எய்துவர்; வைத்திழவார்.

31. புகழுக் கேதுவாகிய குணத்தோடு.

32. இவ்வுலக இன்பங்களுக்குப் பொருள் காரணம் ; வீட்டுலக இன்பத்துக்கு அருள் காரணம்.

33. தம்முயிர்க்கு வருந்துன்பங்களைப் பொறுத்தல்; பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யாமை - அவ்வளவே தவத்தின் வடிவம்.

34. நிகழ்ந்தது கூறுக ; அது தீங்கு பயவாதாயின் மெய்ம்மை; பயப்பின் பொய்ம்மை.

35. மனத்திருள் (அறியாமை) கடியும் பொய்யாமை ஆகிய விளக்கே சான்றோர்க்கு விளக்கு.

36 பலசுடரை உடைய பேர்எரி வந்து தோய்ந்தால் ஒத்த. வெகுளாமை புணரின் - வெகுளாமை கூடுமானல்.

37. அவர் செய்யாமல் தாமே வரும்.

38· கூத்தாடல் காரணமாகக் கூட்டம் அரங்கிலே பலபடியாக வந்து கூடிக், கூத்து முடிவிலே போமாறு போல, செலவமும் நல்வினை காரணமாக வந்து, வினைப்பயன் தீர்ந்தபோது போய்விடும்.

39. நோதல் - துன்பம் எய்துதல்.

40. பொருள்தோறும் உலகத்தார் கற்பித்துக்கொண்டு வழங்குகின்ற கற்பனைகளைக் கழித்து, நின்ற உண்மையைக் காண்பது அறிவு.

TB
O51(G)
N37

42319

7c
17/4

# NAVAYUGA VACHAKAM

FORM I—General Course

BY

Rao Sahib, K. Arunachala Gownder

S. R. SUBRAMANIA PILLAI

PUBLISHERS — TINNEVELLY JN.

[As. 0—12—0